

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 23-10-38 வெகுதான்ய௵ ஐப்பசி௴ 7௳	முத்து 4

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. தீபாவளி	....	74
2. குறிப்பு	...	75
3. போகிற போக்கில்	...	76
4. சிட்டை	...	78
5. வீணை தனம்மாள்	...	79
6. தீபாவளிப் பாட்டு ('ஜோதி')	...	80
7. கிராம சேவை (ஸ்ரீ சுத்தானந்த பாரதி)	...	81
8. விருந்து வேண்டாம் ("ரஸிகன்")	...	82
9. சந்தோஷம் (எஸ். குஞ்சிதபாதம்)	...	85
10. கலையும் ஒழுக்கமும் (வ. ரா.)	...	89
11. தண்டியின் சரிதை (ஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரி)	...	92
12. வலை வீச்சு	...	94
13. புத்தக விமர்சனம்	...	95
14. சினிமாச் சுருள்	...	96

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

தீபாவளி

தீபாவளி ஒரு ஜோதிநாள். தமிழ் நாடு முழுவதும் சில மணி நேரம் மெய்ம் மறந்து மகிழ்ச்சியில் மூழ்குகிறது. துய ரத்தின் ஆடைகளைக் களைந்தெறிந்து விட்டு, புத்துயிர் மஞ்சளிட்ட புது ஆடை யுடுத்து, தமிழ் மக்கள் வறுமையையும் நோயையும் கணநேரம் மறந்து களிக் கிறார்கள்.

இருந்த இடம் தெரியாமல் இருளை வெருட்டியடித்துத் துரத்தி, ஒளி வெளிக் கிளம்பும் 'வெள்ளென'ப் பொழுதில், கிருஷ்ணன் நரகாசுரனை மாய்த்து உலகத் திற்குச் சொர்க்கபோகம் அளித்தார். இருளுடன் நரகனும் அழிந்தான்; ஒளி யுடன் உயர்வும் உதயமாயிற்று.

இன்று, இந்தப் 'புண்யகாலத்தில்' காந்திஜி மிருக பலம் என்ற நரகனை அழித்து, அஹிம்ஸையின் தூய்மையை யும் தேவையையும் ஒளிபோலக் கொண்டு வர அஸ்திரம் தொடுத்து விட்டார்.

சிவகிராமத்தில் செய்த தவத்தின் பயனாக, போதிசத்துவ புத்தப்கவானுக் குத் தோன்றியது போல, காந்திஜிக்கு ஒரு புது வழி தோன்றியிருக்கிறது. அதன் பூரணத் தெளிவுடன் இன்று, முதல் முதலாக, மேல் நாடுகளுக்கு அஹிம்ஸையின் சக்தியைப் பற்றிச் சொல்லுகிறார். இதற்கு முன்பும் அதன் வேகத்திலே அவருக்குப் பூரண நம் பிக்கை யுண்டு; ஆனால் அது சோதனைக் காலத்திலிருந்ததாலும், அது தான் செய்யும் ஒரு பரீட்சை என்ற எண்ணம் இருந்ததாலும், இந்தியாவைத் தவிர வெளிநாடுகளுக்கு அதை அவர் உபதேசம் செய்ய முன்வரவில்லை. ஆலோசனைசெய்து செய்து பார்த்தார். அஹிம்ஸா சக்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்ததன் பயனாக அவரே 'தன்மய'மாகி விட்டார். தான் அதன் கர்த்தா என்ற எண்ணம் போய், தான் அதனுடைய கருவி என்ற முடிவு அவருக்குத் தென்பட்டு விட்டதால், தயக்கமின்றிஅதைப்பற்றி உலகத்திற்குப் பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அஹிம்ஸை மனிதனுடைய மேலு ணர்ச்சிகளின் கைலாச சிகரம்; அங்கு தான் சிவமும் சாந்தமும் இருக்கின்றன. அந்தத் தூய உயர்வு பேடித்தனமல்ல; அந்த சாந்தம் பயங்கொள்ளித்தனமல்ல. அது தைரியத்தின் இருப்பிடம். மனோ வாக்குக் காயங்களில் சத்தியத்தையும் அஹிம்சையையும் வாழ்க்கையின் விதி யாகக் கொண்டிருக்கிறவர்கள் தான் காந்தி ஜியின் அஹிம்ஸைப் படையின் சுத்த வீரர்களாவார்கள்.

எல்லைப்புறத்தில் இப்பொழுது காந்திஜி அந்தப் படைக்கு அடிகோலுகிறார். மிருக பலத்தையே தலைமுறை தலைமுறையாக ஜீவாதாரமாகக் கொண்டிருந்த எல்லைப் புறத்தினர், ஆயுதங்களை விட்டெறிந்து விட்டு, இந்தப் புதுச் சேனையின் தளங் களில் வந்து அணிவகுத்து நிற்கத் தயா ராகிறார்கள்.

காந்திஜியின் இறுதியான முயற்சி இது; ஒரு விதத்தில் 'முத்தின' முயற்சி. இதுவரையில் சரித்திரம் கண்டறியாத ஒரு பரீட்சை. இதன் மூலம் மிருக பலம் என்ற நரகனை நிர்மூலம் செய்ய ஒரு புது உலகப்படை திரட்டுகிறார் காந்திஜி.

முதல் முதலாக இப்பொழுது காந்திஜி சர்வதேசப் பிரச்னையில் தலையிடுகிறார். 'நான் ஜெக் தேசத்தானாயிருந்தால்' என்று தன் மூலமந்திரத்தை எல்லைப்புறக் குன்றத்திலிருந்து பகிரங்கப் படுத்து கிறார்.

அடுத்தபடியாக ஐரோப்பாவில் ஏற் படும் உலக நெருக்கடி காந்திஜியின் மூலம் தீரக்கூடும் என்பதற்கு இது ஒரு சூசனை.

சர்வாதிகாரிகளின் மிருக பலம் நரகா சூரனைப் போல தலைகொழுத்து நிற்கிறது இன்று; ஜனநாயக நாடுகளும் சிறு நாடு களும் வகைதெரியாமல் மூச்சுத் திணறித் தவிக்கின்றன. கிருஷ்ணன் எங்கே என்று கலங்குகின்றன.

உலகம் தீபாவளி பெறட்டும்; அஹிம் ஸையின் தீபஒளி அதற்கு வழி காட்டும். இந்தியாவின் மூலம் உலகம் கடைத் தேறட்டும்.

வந்தே மாதரம்.

இந்த தீபாவளி

இந்த தீபாவளியன்று நமது நாட்டில் குழந்தைகள் பட்டாசு சுடும் பொழுது, ஐரோப்பாவில் பெரியோர்கள் வெடி குண்டுகளேயும் ஆகாய வாணங்களேயும் பொழிந்து கொண்டிருப்பார்கள் என்ற நிலைமை நல்ல வேளையாக மாறிவிட்டது.

ஆனல் வெடிகளேயும் குண்டுகளேயும் போட்டு நாட்டையும் மக்களேயும் கரியாக்காமல் உலகம் நிம்மதி யடையும் நிலைமை மட்டும் கிட்டவரவில்லை. சொல்லப்போனல் இன்னும் தூரமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

மியூனிச் ஒப்பந்தத்துடன் ஆயுத விஸ்தரிப்பு நின்றுவிடவில்லை; பன் மடங்கு அதிகமாக எல்லா நாடுகளும் மும்மரமாக அந்த வேலையில் இப்பொழுது ஈடுபட்டு விட்டன.

* * *

கெடு பிடிகள்

இந்த வாரம் நடக்கப்போகும் பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம் மிகவும் முக்கிய மானதாம். புரட்சிகரமான ஏற்பாடுகள் செய்து தேசத்தை தற்காப்பிற்குத் தயாராக்கப் போகிருர்களாம். இங்கிலாந்தின் சரித்திரத்திலேயே இது முக்கிய மான சந்தர்ப்பம் என்று ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்கா பிரும்மாண்டமான ஆயுத விஸ்தரிப்பு திட்டம் போட்டு விட்டது. நாளுக்கு நாள் பல மடைந்து உலக சமாதானத்திற்கு ஒரு தீங்காக முடியும் முறையில் ஜெர்மனி முன்னேறிக் கொண்டு வருவது தான் அதற்குக் காரணம் என்று டேவிட் லாரன்ஸ் என்னும் அமெரிக்க ராஜீயவாதி கூறுகிருர். ஐரோப்பாவின் உள் நாட்டு சர்ச்சைகளில் அமெரிக்காவுக்கு சிரத்தை இல்லை யென்றும், யுத்தத்தை நிச்சயம் கொண்டு வரும் பாதையில் ஜெர்மனியின் பலாத்காரம் அதிக மாவதைப் பற்றித்தான் அதற்குக் கவலை யென்றும் கூறுகிருர்.

* * *

இங்கே

முஸ்லீம் லீக்கின் சமீப காலத்து நடவடிக்கைகள் எதிர் காலத்தை மிகவும் பாதிக்கும்படியாக இருக்கின்றன. முஸ்லீம்கள் முஸ்லீம் கடைகளில் தவிர வேறெங்கும் சாமான்கள் வாங்கக் கூடாது என்று சமீபத்தில் சிந்து மகாநாட்டில் நிறைவேறின தீர்மானத்தி லிருந்தே வகுப்பு வாதவெறி எவ்வளவு தூரம் போகும் என்பது தெரிகிறது. ஸ்ரீ பஸ்லுல்ஹக்கின் வகுப்பு உணர்ச்சி மூட்டும் படியான பிரசங்கங்களும் ஸ்ரீ ஜின்னுவின் போக்கும் மிகவும் வருந்தத்தக்க முறையில் இருக்கின்றன. இந்த தினுசில் உணர்ச்சிகள் வளர்வது ஹிந்து முஸ்லீம்கள் இந்தியாவில் எதிர்காலத்தில் ஒரு நாட்டு மக்களாக ஒற்றுமை கொண்டு வாழ்வதற்கு மிகவும் பாதகமாக விருக்கும் என்பதை நினைக்க மனது தடுமாறுகிறது.

சமஷ்டியை ஆரம்பிப்பதற்கு முன் ஏற்பாடுகள் வெகு ஜருராக நடக்கின்றன. இந்தியா உதவிக் காரியதரிசி கர்னல் மூர்ஹெட் இந்தியாவுக்கு வந்திருக்கிருர்; வைசிராய் லின்லித்கோ பிரபு திரும்பி விட்டார். சட்டைப்பையில் தயாராக திட்டம் போட்டுவைத்துக்கொண்டு வருகிராரும்.

காங்கிரஸ் மகா சபையின் அபிப்பிராயத்தை ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி பண்டிட் பிரிட்டிஷ் சர்க்காரிடம் கொண்டு போனதாகவும் பண்டித ஜவஹர்லாலும் அவருமாக அதை இந்தியா ஆபீஸில் சமர்ப்பித்ததாகவும், அதற்கிணங்கசிலமாறுதல்கள் செய்து தான் ஆகவேண்டு மென்று தீர்மானித்து பிரிட்டிஷ் சர்க்கார், லோதியன் பிரபு, லின்லித்கோ பிரபு முதலியவர் களுடன் கலந்து கொண்டு ஒரு முடிவிற்கு வந்திருப்பதாகவும் ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

* * *

டிவாலரா கோரிக்கை

பிரிட்டிஷ் ஆதீனத்திலிருக்கும் அல்ஸ்டர் மாகாணம் தென் அயர்லாந்துடன் சேர வேண்டு மென்று டிவாலரா கேட்கிருர். அப்படிச் சேர்ந்தால்தான் அயர்லாந்து தேசிய ஒற்றுமை கொள்ளும். அந்த ஒற்றுமையும் சௌகரியங்களும் பலமும் இருந்தால்தான் இனிமேல் ஏதாவது யுத்தம் ஏற்பட்டால் அயர்லாந்து பிரிட்டனுக்கு உதவி செய்ய முடியும் என்று டிவாலரா இப்பொழுது பிரிட்டனுக்கு எச்சரிக்கை செய்

(77-ம் பக்கம் பார்க்க)

குழந்தைப் பிராயம் முதற்கொண்டு நாற்பது வயது வரையில் நான் வீட்டு வாசல் திண்ணையை விட்டு இறங்கினவனல்ல. கையால் வேலை செய்தவனுமல்ல. மழை பெய்து வாங்தோடின மணலிலும் ஆற்றங்கரையிலும் நீர் பெருகும் வரையில் ஊற்று நோண்டினதைத் தவிர இதர தொழிலொன்றும் கையால் நான் செய்த ஞாபகம் இல்லை. மறந்துவிட்டேன். பேனு பிடித்தெழுதுவது தவிர என்றும் சொல்ல வேண்டும்—தனிமையான வாழ்வு.

* * *

ஆடைத் தயிர் என் இலைத் தோழன். குருட்டு ஆலோசனை என் நடைத்தோழன். வீட்டுவாசல் திண்ணை என் அழியாச் சோம்பேரி மடம். அல்லது வக்கீல்மார்கள் சேர்ந்து சோரும் தினசரி இடம்.—போவோர் வருவோரைக் கண்டு களித்துப் பேசும் ஆனந்தத்திலேயே ஆழ்ந்திருந்தேன்.

* * *

இப்படி 'சட்டியில்' வளர்க்கப்பட்ட எனக்கும் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு பாரதநாடு முழுவதும் சுற்று பிரயாணம் செய்யவேண்டுமென்று அவா ஏற்பட்டது. பல தடவைகளில் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும், மூன்ருவது வகுப்பில் மூட்டைப் பூச்சியை தோழனுக் கொண்டு ஆயிரக் கணக்கான மைல்கள், 'வயத்தைக் கட்டி வாயைக் கட்டி', ஆனுல் கண்ணை மாத்திரம் கட்டாமல், பிரயாணம் செய்திருக்கிறேன். ஜனன காலத்தில் எல்லா கிரஹங்களும் ஸ்திர ராசியில்மைந்த எனக்கு பிரயாணத்தில், ஆசையும் கிடையாது, சந்தோஷமும் கிடையாது. மன ஓட்டத்தின் மகிமைக்கு ரயிலோட்டம் ஈடாகுமா? தவிர, ரயில் பிரயாணம் செய்து நமது அழகிய இரண்டு கண்களையும் நிலக்கரிச் சுரங்கமாக்க யார் பிரியப் படுவார்கள்?

* * *

இப்படி சும்மாவிருக்கும் ஆனந்தத்தையும் ஆடைத்தயிரில் மூழ்கும் பாக்கியத்தையும் என் மனுேபாவத்தில் உண்டான ஒரு தாபக் கிளர்ச்சி அழித்து விட்டது. இதை நானே கொஞ்சகாலம் அறியவில்லை.

நிலக்கரி விழுந்த கண்போல் எப்பொழுதும் என்மனம் ஒரு விஷயத்தை நினைத்து நினைத்து துடித்துக் கொண்டே யிருந்தது. இந்த 'முவ்வாயிரம் முக்கோடி' ஈசுவர சிருஷ்டியில் நமது பாரதநாடு மாத்திரம் ஏன் அடிமை நிலையில் எவ்விதத்திலுமிருந்து கொண்டே நெடுங்காலமாய் வரவேண்டும்? பாலும் தேனும் ஆற்று வெள்ளம்போல் பெருகும் இந்த பாரத நாட்டில் ஏன் முப்பதுகோடி ஜனங்களும் ஊணுக்குக் கூட வருந்த வேண்டும்? இந்தப் பரபரப்பும் ஞாபகமும் என்னை என் திண்ணையிலிருந்து இறக்கிவிட்டது. சோம்பேரி மடத்திலிருந்து கிளப்பி விட்டது. பேனுவை எரிந்து விட்டு பத்து வருஷ காலமாய் ஊர் ஊராய், காசி முதல் ராமேச்வரம் வரையிலும், திரிந்தேன். கண்டேன், களித்தேன். கையெடுத்துக் கும்பிட்டேன். தலைவணங்கி தெய்வத்தை வேண்டினேன். இந்த அடிமைத்தனத்திற்கு முக்கிய காரணம் என்ன என்பதைக் காண எங்கும் திரிந்தேன்.

* * *

ஒரு நாள், எருக்கு முளைத்துப் பாழடைந்த தஞ்சாவூர்க் கோட்டையை சுற்றிப் பார்த்துவிட்டு, வேலையில்லாமல், அழகிய நாலு தேரோடும் வீதியிலும் உலாவி வந்தேன். ஒவ்வொரு வீட்டிலும் திண்ணைக்கு நாலுபேருக்குக் குறையாமல் சும்மா உட்கார்ந்து கொண்டு இருந்தார்கள். இதர நகரங்களிலும் கிராமங்களிலும் காண்பதுபோல் அவர்கள் வம்படித்துக் கூட பொழுது போக்கவில்லை. வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டு கண்ட இடத்தில் துப்பிக்கொண்டுகூட இருக்கவில்லை. பரப்ரம்மம்போல் திண்ணைக்கு நாலுபேர் வழிகள் சும்மா உட்கார்ந்திருந்தார்கள்—தூணுக்கு தூண்போல. சும்மா இருப்பது அரிதென்றே நினைத்தேன்.

* * *

ஆனுல், தாயுமானவர் திவ்விய மொழியும் என் மனதைத் தேற்றவில்லை. அதன் கருத்து இதில்லை என்றும் நினைத்தேன். என்னையறியாமலே இந்த சுகவாசிகளைக் கண்டதும் ஒரு துக்கம் என் மனதில் குடிகொண்டது. மெய்மறந்து பிருகதீசுவர சுவாமி கோயிலருகில் போய் புது வெள்

ளம் புரண்டோடும் புது ஆற்றங்கரையில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தேன். குழந்தையின் மழலைச்சொல்போல் ஆற்று வெள்ளம் புரண்டது. சாயங்கால வெய்யில் பிரகதீச்வரஸ்வாமி கோவிலின் உன்னத கோபுரத்தின் ஸவர்ண கும்பங்களின் மேல் தாயின் அன்புபோல் தொடர்ந்து அடித்தது.

* * *

நமது அடிமைத் தனத்திற்கு இது அல்லவோ காரணமென்று திடுக்கிட்டேன். ஒருவீட்டில் நாலுபேர் சுகவாசித்தொழில் கொண்டு வாசல்தூணுக்குத் தூணாய் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தால் வாயில் சோறு எப்படி வந்து விழும்? நியாயமானமுறையில் அன்னமும் வஸ்திரமும் பிறரை ஏய்க்காமல் எப்படி கிடைக்கும்? இந்தியாவில் இப்படிக் கோடிக்கணக்காய் 'சோம்பலம்பலம் வேகுதே' என்று கிடக்கும் பேதைகளுக்கு வழியென்ன என்று சிந்தித்து குமுழியிட்டுச் சுழலும் நீரோட்டத்தை கேட்டேன். சாந்த பரவசமானேன். மகாத்மா காந்தியின் உருவமும் அவர் கையில் நிற்கும் ராட்டினமும் நீரோட்டத்திலும் நிழலிலும் ஒளியுடன் நின்றது. தினம் ஒரு அணா கிடைத்தாலென்ன? அரையணா கிடைத்தாலென்ன? ராட்டினமும் காந்தியைப்போல் ஒரு சின்னம் தானே? உடனே ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். நமது நாட்டில் ஒவ்வொருவரும் ஏழு வயது குழந்தை முதல் எழுபது வயது கிழவர் வரையில், தினம் ஒருமணிநேரம் கையால் ஏதாகிலும் ஒன்று செய்ய இன்று முதல் ஆரம்பித்தால், ஆரம்பித்த 365 நாளைக்குள் நமது அடிமைத் தனம் ஒழியும் என்ற தீர்மானத்திற்கு வந்தேன். ராட்டினம் சுற்றினாலும் சரி, மரம் மட்டைகளுக்குத் தண்ணீர் இரைத்தாலும் சரி, உழுதாலும் சரி, புஷ்பச் செடிக்கு தண்ணீர் மொண்டுவிட்டாலும் சரி, தெருப் பெருக்கினாலும் சரி, சாக்கடை வாரினாலும் சரி, எந்தக் கைத் தொழில் செய்தாலும் சரி, பேச்சையே விற்றுப் பணமாக்கி காய்ச்சிக் குடிக்காமல் கையால் உழைத்துப் பாடுபட்டு உண்மையான செல்வத்தை அவரவர்களே உற்பத்திசெய்து பிழைக்கிறதே மானிடப் பிறப்பாகும். அப்பொழுதல்லவோ உண்மையான அடிமைத்தனம் தொலையும்? சாந்தமும் சக்தியும் செல்வமும் நாட்டில் குடியேறும்?

* * *

விழித்துக்கொண்டேன். ரயிலுக்கு நாழியாய் விட்டது. பறந்து ஸ்டேஷனுக்கு ஓடினேன்.

மணி.

(75-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். அல்ஸ்டரை அயர்லாந்துடன் சேர்ப்பதற்கு பிரிட்டன் ஆதரவு அளித்து ஒத்தாசை செய்ய வேண்டும் என்று காரியவாதியான டிவாலரா சமயம் அறிந்து கேட்கிறார்.

அல்ஸ்டரும் தென் அயர்லாந்தும் பிரிந்திருப்பதென்பது மிகவும் அசம்பாவிதமானது. ஒரு தேசத்தில் இப்படி இரு பகுதிகள் வெவ்வேறு அரசாங்கங்களுக்கு உட்பட்டிருந்தால் தேசம் உருப்படாது.

இந்த மாதிரியான பிசகைத்தான் இந்தியாவிலும் செய்ய வேண்டுமென்று சமீப காலத்தில் சில முஸ்லீம் பிரமுகர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருக்கும் மாகாணங்களை சர்வ முஸ்லீம் சாம்ராஜ்யத்தில் சேர்த்து, சிறு பான்மையோருக்குத் தேவையான பாதுகாப்புகள் அளித்துவிடலாமென்று ஒருவிபரீதமான இயக்கத்தைக் கிளப்பி இருக்கிறார்கள் இதனால் தேசத்திற்குத் தீமையைத்தவிர வேறொன்றுமில்லை. அயர்லாந்தின் சரித்திரம் நமக்குப் படிப்பினை இல்லையா? இந்தியாவில் அல்ஸ்டரை உற்பத்தி செய்யலாமா?

அக்டோபர் 15

ஹங்கேரி ஸெக் தேசத்தோடு பாக விஷயமாகப் பேச வருகிறது.

"ஐயா! உங்கள் தூதர் எங்கள் தேசத்திற்கு வேண்டாம்" என்று பிரஸீல தேசம் ஜெர்மனியைப் பார்த்துக் கூறுகிறது. இதனுல் ஜெர்மனி கோபமடைந்து "எங்களுக்கும் உங்கள் தூதர்வேண்டாம்" என்று மரியாதையாக பிரஸீல் தூதருக்கு பெர்லினிலிருந்து சீட்டுக் கொடுத்து விட்டது.

மாஜி வங்காள கவர்னர் ஸர் ஜான் ஆன்டர்ஸனுக்கு பிரிட்டிஷ் மந்திரி சபையில் வேலைகிடைத்தாலும் கிடைக்கும் அல்லது இல்லாவிட்டாலும் இல்லை என்று ராய்ட்டர் வெகுதெளிவாக எடுத்துக் கூறுகிறது.

பிரிட்டன் ஸெக் நாட்டிற்கு ஏராளமாகக் கடன் கொடுக்க ஏற்பாடாகி இருக்கிறது.

"நான் ஸெக் தேசத்தானு யிருந்தால்" என்று மகுடமிட்ட கட்டுரையை காந்திஜி 'ஹரிஜனில்' எழுதியிருக்கிறுர். அஹிம்சை தர்மத்தை அவலம்பிக்கும்படி ஸெக் தேத்தாருக்குக் கூறுகிறுர்.

கர்நாடக சங்கீதக் களஞ்சியமான வீணை தனம்மாள் நம்மை விட்டு நீங்குகிறுர்.

பசுமலை மில் தகராறு சம்பந்தமாக காங்கிரஸ் அஸெம்பிளி மெம்பர் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப் படுகிறுர்.

அக்டோபர் 17

அமெரிக்காவில் ஆயுத முஸ்தீப்புக்கள் தடபுடலாக நடக்குமென்று தெரிவிக்கிறுர்கள். பிரான்ஸும் 1750 புதிய ஆகாய விமானங்களுக்கு ஆர்டர் கொடுக்கிறது.

பாலஸ் தீனத்தில் கொள்ளையும் கொலைகளும் அதிகரிக்கின்றன. எப்படியாவது பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலை நாட்டி விட வேண்டுமென்ற நோக்கத்துடன் பாலஸ்தீன் ஹை கமிஷனர் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் ஆப்த நண்பரான சர்ச்சில் துரை அஹிம்சா தர்மத்தை உணர்ந்தவர் போல் ஹிட்லர்மேல் கோபித்துக் கொண்டு "ஐயோ! இப்படி நாம் பலாத்காரத்துக்கு முன் பணிவதா? உலகம் எதிர்காலத்தில் என்ன ஆகும்?" என்று சீறுகிறுர். அந்தோனி ஈடனும் "நம் மானம் போய் விட்டதே! எதிர் காலத்தில் ஏராளமான கஷ்டங்கள் வரப்போகின்றன. அவைகளை ஒற்றுமையோடு எதிர்த்து வெற்றிபெற்று விளங்குவோமா?" என்று கூறுகிறுர்.

இப்படி இங்கிலீஷ்காரர்கள்கூட தங்கள் நிலைமையை நொந்து கொள்ளும் போது, நமது ஸர் கே. வி. ரெட்டி மட்டும் சென்னையில் உட்கார்ந்து கொண்டு, "மியூனிச் ஒப்பந்தம் பேஷ்! பேஷ்!" என்று கூத்தாடி விட்டு "அது பிரிட்டனுக்கு கௌரவத்தை கொண்டு வந்து விட்டது" என்று புதிதாக ஒரு 'உண்மையைக்' கண்டு பிடிக்கிறுர்!

மைசூர் மாணவர் மகாநாடு பொறுப் பாட்சியை வேண்டுகிறது.

என்றுமில்லாத திருநாளாக ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் பொப்பிலி ராஜா தலைமையில் கூடி எந்தக் கோட்டையையோ பிடிக்க ஆலோசனை செய்கிறுர்கள்.

சென்னை பிலிம் லீக் விமரிசையாக வெள்ளி விழாக் கொண்டாடுகிறது.

அக்டோபர் 18

அயர்லாந்து இனிமேல் பிரிந்து இருக்கக் கூடாது என்று டிவாலரா பிரிட்டனை எச்சரிக்கிறுர்.

அமெரிக்காவில் ரகசிய ஒற்றர்கள் விசாரணையில் ரூஸ்வெல்டின் பொய்க் கையெழுத்துச் செய்த ஒரு பத்திரம் கண்டுபிடிக்கப் படுகிறது.

ஸெக்-ஜெர்மன் எல்லை சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு தீர்க்கப் படுகிறது.

தென் சைனுவிலுள்ள கான்டன் நகரத்தைப் பிடிக்க ஜப்பானியர் கஜகர்ணம் போடுகிறுர்கள்.

பாலஸ்தீனத்தில் சர்க்கார் கலகத்தை அடக்கத் தீர்மானமான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு விட்டார்களாம்.

திருவாங்கூரில் சமஸ்தான காங்கிரஸ் தலைவர் கைது செய்யப்படுகிறுர். "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை அவ்வளவு நல்ல பத்திரிகை அல்ல என்று அதிகாரிகளுக்கு ஞானேதயம் உண்டாகிறது. அதை வாசித்தால் ஜனங்கள் கெட்டுப் போய் விடுவார்களென்று அவர்களுக்குத் தோன்றி அப்பத்திரிகையை சமஸ்தா

னத்துக்குள் வராமல் தடுத்து விட்டார்கள்.

அக்டோபர் 19உ

ஜப்பானியர்கள் தென் சைனுவில் சில இடங்களைப் பிடித்திருப்பதாக ஒருசெய்தி கூறுகிறது.

ஸெக்தேசம் பாக விஷயத்தை 24 மணி நேரத்திற்குள் தீர்க்காவிட்டால் போர் தொடுப்பதாக ஹங்கேரி பயமுறுத்துகிறது.

பாலஸ்தீனத்தில் ராணுவ கெடுபிடி ஆரம்பமாகிறது. ஒரு முஸ்லீம் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப் படுகிருர்.

ஸர் ஷண்முகம் லண்டனில் பேசுகிருர். சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேர்ந்தால் தான் ஸ்வாரஸ்யமாக இருக்கும் என்று சொல்கிருர்.

மௌலானு ஷவுகத் அலி சில ரஸமான சொந்த விஷயங்களைப்பற்றிச்சொல்லி இன்னும் 33 வருஷகாலம் உயிர்வாழப் போவதாகவும் கூறி நமக்குச்சிரிப்பு மூட்டுகிருர்.

மதுரை மஹாலக்ஷ்மி மில் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஸ்ரீ முத்து ராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்ட விவரத்தை சென்னை சர்க்கார் கூறுகிறது.

வீணை தனம்மாள்

வீணை தனம்மாள் மறைந்து விட்டது கர்னாடக சங்கிதத்திற்கு ஒரு பெருத்த நஷ்டம். சுத்தமான கர்னாடக சங்கிதத்தை சுருதிலயத்தில் பதித்துப் பாடி வந்த மகாபரம்பரை தனம்மாளுடன் முடிவடைகிற தென்பதை உணரும்பொழுது சங்கீதப் பிரியர்களின் உள்ளம் கலங்குகிறது.

அந்தப் பழைய தீரர்களின் பாணி இப்பொழுது வேறெங்கும் தென்படுவது துர்லபம்; எங்கோ, ஓரிருவர் குந்துமணிகள் போல மறைந்து கிடக்கிருர்கள்; அவர்களிடத்திலும் சுகபாவம் இருந்தால் உழைப்பில்லை; உழைப்பிருந்தால் சுகபாவம் இல்லை.

தனம்மாள் போன்ற மேதைகளிடத்தில் இரண்டு குணங்களும் சமபாகமாகக் கலந்து தென்பட்டன. இன்று வெறும் சுகத்திற்காக கர்னாடக சங்கிதத்தையே உருமாற்றிக் குலைக்கும் பாணியே தலை தூக்கி நிற்கிறது. ராகம், தாளம், பல்லவி என்ற முறையே போய்விட்டது.

பத்துப் பனிரெண்டு வருஷங்களுக்கு முன்பு, கும்பகோணம் பஞ்சாபகேச பாகவதர் வீட்டில் ராமநவமி உற்சவத்தின் கடைசிநாள் கச்சேரி. கச்சேரி 'விச்ராந்தி' யாக வீட்டிற் குள்ளேயே நடந்தது. இரவு சுமார் ஒன்பதுமணி; கேட்பவர்கள் பொறுக்காக இருபது பேர்தான். தனம்மாள், சாரதாவின் அவதாரமே போல, வீணை வாசித்துக்கொண்டிருந்தார். மாயா மாளவகௌளராகத்தை ஆலாபனம் செய்த பொழுது கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அப்படியே ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொரு இழைப்பிலும் மனம் சுழலில் அகப்பட்ட பொருள்போல, அமுங்கிப் போய் லயித்தது. அந்த வாத்தியத்தின் உயிர் நிலைகளை அவர் தொட்டு அறிந்ததுபோல் இனிமேல் யார் அறியப்போகிருர்கள்? அந்த வாத்தியத்துடன் அவருக்கு அவ்வளவு நெருங்கிய பரிச்சயம்.

அவருடைய சந்ததியிடம் அவருடைய சங்கீதத்தின் இணையற்ற சில அம்சங்களைக் காணலாம் என்ற ஒரு ஆறுதல் நமக்கு இருக்கிறது.

ஆனல் தனம்மாளின் கைவிரல்களிலிருந்து பிறந்த கானத்தை நாம் இனிமேல் கேட்க முடியாது. அவர் கைவிரல் பட்ட வீணை மட்டும் அந்த நாதத்தில் துடித்து அந்த நினைவிலேயே மௌனகானம் செய்துகொண்டிருக்கும்.

தீபாவளிப் பாட்டு

"ஜோதி"

1

உள்ளம்

உள்ளத்துள் ளேயுள்ள கொள்ளைத்து யர்களை
ஓட்டித் தொலைத்திடுவோம்—அருள்
வெள்ளத்தி லேமிதந் தானந்த மூர்த்தியின்
மெய்ம்மைக் கழல்நினைவோம்.

2

நெஞ்சில் உதிக்கும் அசுரஎண் ணங்களை
நீறு படுத்திடுவோம்—அன்று
வஞ்ச நரகனை மாய்த்தொளி தந்து
மகிழ்ந்தருள் கண்ணனைப்போல்.

3

உடல்

ஏறிய மெய்யின் அழுக்கெலாம் போகவே
எண்ணெய் முழுக்கிடுவோம்—தூய்மை
வீறிய கோடி உடுத்துப் புதுமை
விளைவில் திளைத்திடுவோம்.

4

வீடு

மூலை முடுக்கிலும் சோதி பரப்ப
முழுவிளக் கேற்றிடுவோம்—இந்த
ஞாலமெங்கு மின்று தீவிளி யாதலின்
நண்ணும் இருளில்லையே.

5

நாடு

நாட்டினிற் கைத்தொழில் ஓங்கிட இன்னொரு
நல்லசங் கற்பம்கொள்வோம்—புது
வேட்டியில் விளக்கினில் எண்ணெய் முழுக்கில்
விளங்கு கருத்துணர்வோம்.

6

உள்ளத்துள் ளேயொளி, மெய்யில் விளக்கம்,
உயரில்லத் திற்பிரபை—எங்கள்
தள்ளற் கரியபொன் னாட்டினில் இன்பம்
தழைப்பதே தீபாவளி!

கிராம சேவை

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி)

தேசத்தின் க்ஷேமமெல்லாம்—சிறு
சேரியின் க்ஷேமமென் றோதிடுவோம்.
வீசுவோம் கல்வியொளி—ஆங்கே
வீடுதொறும் விளக் கேற்றி வைப்போம்.
வாசனை வீசிடவே—கனி
மாமலர்ச் சோலைக ளாக்கிடுவோம்.
காசு பணங்க ளெல்லாம்—பல
கைத்தொழி லோங்கிட வைத்திடுவோம்.
பண்ணைப் பணக்காரர்—கையைப்
பார்த்துப் பிழைத்திடும் ஏழைபடும்
புண்ணைத் தவிர்த்திடுவோம்—விளை
போகம் பொதுவுறப் பாகம்வைப்போம்.
தண்ணீர் வசதி செய்வோம்—நல்ல
தாவர சாத்திரம் ஆவலுடன்—கற்று
மண்ணைப் பொன் னாக்கிடுவோம்—கூட்டு
வாணிபச் சங்கத்தை யூக்கிடுவோம்.
கள்ளுக் குடி யொழிப்போம்—கஞ்சா
காப்பி, புகையிலை தேயிலையும்,
சள்ளைசெய் சூதுகளும்—சிறு
சாமிக் குயிர்பலி போடுவதும்,
மெள்ளக் குடி கெடுக்கும்—பாழும்
வேசை விடுதியும், வெட்டி வம்பும்,
துள்ளும் பணச் செருக்கும்—தலை
தூக்காப் பொதுநல மாக்கிடுவோம்.
சிக்கன வாழ்வுரைப்போம்—கடன்
சீரழி வில்லாது நேர்மையுறப்
பக்குவக் கூட்டுரவைக்—காட்டிப்
பண்டக சாலைகள் நாட்டிடுவோம்.
எக்குல மாயிடினும்—ஊரில்
எல்லாரும் ஒன்றென வாழவைப்போம்.
தக்கதோர் தொண்டர்படை—சேர்த்துத்
தன்னல மின்றிப் பணி புரிவோம்.
ஒற்றுமை யாக்கிடுவோம்—ஊரில்
உட்புகைச் சல்கலை நீக்கிடுவோம்.
வெற்றுரை வீண்பொழுது—சண்டை
வெய்ய விவகாரம் பொய்வழக்கு
சற்றுமி லாது செய்வோம்—பொது
தர்மவழியினிற் கர்மஞ் செய்வோம்
கற்றுக் கலைவளர்ப் போம்—தொழிற்
கையாற் கடவுளை வாழ்த்திடுவோம்.

விருந்து வேண்டாம்

["ரஸிகன்"]

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

மதுரை சென்றேன். அந்தப் பாழும் ரயில் ராத்திரி மூணு மணிக்கு அங்கே போய்ச் சேர்ந்தது. சாமானியப் பழக்கமுள்ள வக்கீல் ஒருவர் தான் சொக்கிகுளத்தில் பங்களாக்கட்டி யிருப்பதாயும், நான் எப்பொழுது மதுரை வந்தாலும் அவசியம் தன்னகத்தில் வந்து இரண்டு நாளாவது தங்கிவிட்டுப் போகவேணுமென்று அடிக்கடி பட்டணம் வரும்போதெல்லாம் சொல்லி யிருந்தார். அது ஞாபகம் வர, இரண்டு ரூபாய் கொடுத்து 'டாக்ஸி' வைத்துக்கொண்டு—அந்த நடுநிசியில் வேறு வண்டியே கிடையாது—அங்கே போனேன். திருப்பதியில் மொட்டை தாதனைக் கண்டாயோ என்ற கதையாய், ஒன்றைப்போல் ஒன்று காம்பவுண்டுச் சுவரும், புழுதியடைந்த நாலைந்து செடியும் சதுரப் பெட்டிபோல ஒரே பிளானுன வீடுகளும் நிறைந்த அந்த இடத்தில் ராஜகோபாலய்யர் வீட்டைக் கண்டுபிடிப்பது பிரம்மப் பிரயத்தனமாயிற்று. கடைசியாய் விசாரித்துக் கொண்டுபோய்ச் சேர்ந்தேன். பேசின கூலியைவிட மெனக்கட்டதற்காக 'டாக்ஸி'க்காரனுக்கு ஒரு ரூபாய் கூடக் கொடுத்து பெட்டியும் படுக்கையும் தூக்கிக் கொண்டு காம்பவுண்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றேன்.

நாலுமணி யிருக்கும். அடித்துப் போட்டாப்போல் நிசப்தமா யிருந்தது. தூங்குகிறவர்களை எழுப்ப மனமில்லாமல் வாசல் தாழ்வாரத்தில் பெட்டியை வைத்து விட்டுப் படுக்கையைப்பிரித்துப் படுத்தேன். தூக்கம் வருகிறதா? அயலூர். அந்நியர் வீடு. எங்கேயோ கோழி கத்துகிறது. வாசலில் கட்டைவண்டி கடகடவென்று போகிறது. அடுத்த வீட்டில் நாய் குரைக்கிறது. பொழுது விடியும் தருணம். உடம்பு அயர்வில் தூங்கிவிட்டால்யாராவது கதவைத் திறந்து வந்து முன்பின் தெரியாத ஒருவன் படுத்திருப்பதைப் பார்த்து பங்களா வாசிகள் வழக்கத்தையொட்டி 'கலாட்டா' பண்ணினுல் விகாரமாகவல்லவோ இருக்கும் என்ற யோசனை வந்தது. படுக்கையைச் சுருட்டி வைத்து அங்கிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தேன். சற்றுநேரத்திற் கெல்லாம் ஓரம்மாள்—அந்த வீட்டு யஜமானி என்று பின்னுல் தெரிந்தது—கதவைத் திறந்தாள். என்னைப் பார்த்ததும் சட்டென்று உள்ளே போய்விட்டாள். இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் ராஜகோபாலய்யர் வந்தார். என்னைப் பார்த்து அரைவினுடி அடையாளம் தெரியாதவர் போல் திகைத்து, அப்புறம், "வாருங்கோ, வாருங்கோ, என்ன அபூர்வமா யிருக்கே. ஷட்டிவில் வந்தேளோ. அது மூன்று மணிக்கே வந்தூடரதே. அடடா, கதவை தட்டப்படாதோ. இப்படி வாசலில் காத்திருப்பானேன்" என்று நான் பதில் சொல்ல இடம்கொடாமல் உபசாரம் சொல்லி முடித்தார். தூக்கம் வரவில்லையென்றும் தூங்குவோரை எழுப்ப இஷ்டமில்லை யென்றும் சொல்லி அவர் கவலையை நிவர்த்திசெய்தேன்.

அவர் வீட்டில் தங்கியிருந்த அன்று முழுவதும் எனக்கு விசாரணைக்குக் குறைவில்லை. விசாரணை ரொம்ப அதிகப்படியாயிருந்ததென்பது தான் எனக்கு சிரமம். ராஜகோபாலய்யர் ஸம்ஸாரி. பல ரகமான வாசிப்பில் அமர்ந்த 3, 4 பிள்ளைகளும், கலியாணம் ஆகாத 4, 5 சிறு பெண்களும் அவருக்குண்டு. வந்திருக்கும் விருந்தாளியை உபசரிக்க வேண்டிய கடமை அவர்கள் ஒவ்வொருவரும் தனக்கு இருப்பதாக எண்ணினுர்கள். விருந்தாளிக்கு மூச்சு விடப்பொழுதில்லை. வந்து நாலு நாழியாவதற்குள் அவர்கள் யோக க்ஷேமமும், அவர் சுற்றத்தார் உறவினர் லாப நஷ்டங்களும், அந்தத் தெருவில் குடியிருக்கும் மனுஷியாள் தாரதரமும், ஜாடாவாக ராஜகோபாலய்யர் அத்துபடி பண்ணிவிட்டார். பிறத்தியார் விவகாரத்தில் தலையிட்டுக் கொள்வது, வம்பு பேசுவது முதலான விஷயங்களில் பிரியமில்லாத எனக்குக் கொஞ்சம் சிரமமாகவே யிருந்தது. ஆனுலும் அவர் சொல்லும்போது மூஞ்சியைச் சுளுக்கினுல் அவருக்கு வருத்தமாயிருக்குமே என்று பொறுத்திருந்தேன். அவர் அதோடு நிற்கவில்லை. என் குடும்ப நிர்வாகத்தைப் பத்தின பல பிரச்னைகளை சகஜமாக சொல்ல ஆரம்பித்தார். எனக்கு என்ன சம்பளம், எத்தனை குழந்தைகள், அண்ணன் தம்பிமார் எத்தனை? ஏக குடும்பந்தானு, பூஸ்திதி என்ன என்று பல கேள்விகள் கேட்டார். ஜனன மரணக் கணக்கெடுக்கும்போதுகூட அவ்வளவு கேள்வி என்னை யாரும் கேட்டதில்லை. பட்டதும் படாததுமாய் ஏதோ ஒரு தினுசாய் பதில் சொல்லி முடித்தேன். மத்தியான போஜனம் முடித்ததும், உறங்கும் வழக்கமில்லாமல் போனுலும், இப்பேர்க்கொத்த

கேள்விகள் மறுபடியும் கிளப்பினுலென்ன பண்ணுவதென்று பயந்து, 'ராத்திரி கண் விழித்த சிரமம், சற்று திண்ணையில் படுத்துக் கொள்கிறேன்', என்றேன். ராஜகோபாலய்யர், 'ஆகா, அப்படியே. யாரடா, வீரா, அய்யருக்கு திண்டு கொண்டுவந்து போடு. தூங்கர வரையில் சற்று விசிறி போடு,' என்று வேலைக்காரனை ஆக்ஞாபித்தார். மத்தியான வேளையில் தலையணை வைத்துக் கொள்ளுவதில்லையென்றும், திண்ணையில் காற்று நன்ருய் அடிப்பதால் விசிறி வேண்டாமென்றும் சொல்லி அவனை யனுப்பி விட்டுக் கண்ணை மூடிக்கொண்டு பெஞ்சில் 'அக்கடா'வென்று படுத்திருந்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் ராஜகோபாலய்யர் கச்சேரிக்குப் போகவில்லை. நான் எப்பொழுது கண்ணைத் திறக்கபோகிறேன் என்று காத்திருந்த அவர் சிற்றுண்டி கொண்டு வரச்சொல்லி உத்தரவு பண்ணினுர். எட்டு வயது இருக்கும் அவர் சின்னப் பெண் இரண்டு பேருக்கும் தட்டில் பலகாரம் கொணர்ந்து கொடுத்தாள். அந்தக் குழந்தை நல்ல அழகு. அய்யருக்கு அவளிடம் மிகுந்த பிரியமென்று தெரிந்தது. அழகுக்குத் தகுந்த புத்திசாலித்தனமும் இருப்பதாக எனக்கு மெய்ப்பிக்கும் பொருட்டோ என்னவோ, அவள் வாசிப்பு, பாட்டு, கோலம் போடுவதில் திறமை முதலியதை எனக்கு விஸ்தாரமாய்ச் சொன்னதும் தவிர, அவளை எனக்குப் பாடிக் காண்பிக்கும்படி வற்புறுத்தினுர். அந்தக் குழந்தையும் அதிக கிராக்கி பண்ணுமல் இரண்டொரு பாட்டுப் பாடினுள். நான் எதிர்பார்த்தபடி, சொன்னத்தைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல் வாத்தியார் சொல்லிக்கொடுத்தபடி ஒப்பித்தாள். அய்யர்வாள் மனதில் ஆழ்ந்து கிடக்கும் ரஹஸியங்களை அவள் கண்டாளா, பாவம்! கொஞ்சங்கூடக் கூசாமல் கந்தர்வகானம் என்று மெச்சி, மெதுவாய் தப்பிக்கிளம்புவோமென்று, 'நாயகன் மஹால், பொத்தாமரை இவைகளைப் பார்த்து வருகிறேன்,' என்று சொன்னேன். நல்ல வேளையாய் அய்யரை அந்த சமயம் யாரோ பார்க்க வந்தார். தான் என்னேடு வர முடியாததற்கு வருந்தினவராய்; "இருக்கட்டும், நான் அசாமி அனுப்புகிறேன். அடே, நடராசு, மாமா பின்னேடே போய் எல்லாம் நன்னு காண்பிக்கிரூயா?" என்று தன் நாலாவது பிள்ளையைக் கூப்பிட்டுச் சொன்னுர். 'எதுக்கு, வாண்டாம், பையனை வீணுய் அலக்கழிப்பானேன்?' என்று நான் வாயெடுப்பதற்குள், 'இதோடு ஒழிந்தது இன்னி - வாசிப்பு' என்ற சந்தோஷத்தில் கண் மூடித் திறப்பதற்குள் சட்டையை மாட்டிக்கொண்டு எனக்கு முன் அவன்வாசலுக்குப் போய்விட்டான். என்ன பண்ணுவது!

ஒரு வேளை இவனுவது சள்ளுவாயனுயில்லாமலிருக்கப்படாதா என்று மனக் கோட்டை கட்டிக்கொண்டு கிளம்பினேன். நாயக்கன் மஹாலுக்குப் போகும் வழியில் உள்ள ஒரு பெரிய கட்டிடம் கூட விடாமல், அதன் சொந்தக்காரர் யார், எத்தனை ரூபாய் சிலவழித்துக் கட்டினுர், எந்தக் கக்ஷியினர், முனிசிபல் எலக்ஷனில் எவ்வளவு சிலவிட்டார் என்ற விவரங்களை, அவர்கள் வீட்டுக் கணக்குப்பிள்ளைகளுக்குக்கூடத் தெரியாது, அவ்வளவு தெளிவாய் விஸ்தரித்தான். மஹாலையடைந்தோம். அதன் விஸ்தாரமான பரப்பும் ஆகாயத்தை அளாவிய விமானமும், சலவைக் கல்போல் பளபளப்பும் வழவழப்பும் உள்ள உயர்ந்த தூண்களும், வெண்ணெயில் செதுக்கினதுபோல் விசுவகர்மாவின் திறத்தைப் பழிக்கும் தளத்தின் உள் கையில் அமைக்கப்பட்ட சிற்பவேலைகளும் பார்க்கப் பார்க்க ஆனந்தமாயிருந்தது. பத்து நாள் பார்த்தாலும் போதாதுபோல் தோணிற்று. ஆனுல் எனக்கு இருந்த அவகாசம் இரண்டு நாழிகூட நிதானமாய்ப் பார்க்க விட்டாமல் நடராசு குளவியாய்க் கொட்டி விட்டான். அவனுக்கு மஹால் கொல்லைக்காட்டுப் பச்சிலை. தன்னப்பா தொழில் நடத்தும் கோர்ட்டுகள் வைப்பதற்காகவே அந்தக் கட்டிடம் கட்டப்பட்டதாக அவன் அப்பிராயம் என்று எண்ண வேண்டிய தாயிருந்தது அவன் பேசுவதைப் பார்த்தால். நான் உயர உயர அண்ணுந்து பார்ப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. "அங்கென்ன இருக்கு,மாமா, வௌவாலடஞ்சு கிடக்கு. இதோப் பார்த்தேளா, இதுதான் டிஸ்டிரிக்டு ஜட்ஜு கோர்ட்டு, எங்கப்பா இங்கேதான் (ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டி) உட்காருவர். நீங்க கோர்ட்டு நடக்கிற அன்னிக்கி வந்து பாக்கணம். இப்போ வந்திருக்கிற ஜட்ஜு துரை ரொம்ப கெட்டிக்காரன். மின்னே ஒரு முசுடு இருந்தது, பிராம்மணப்பொணம். வக்கீல்களெப்பேசவே விடறதில்லை. எப்போது பாத்தாலும் வெடுவெடுன்னிருக்கும். துரை ரொம்ப நல்லவன். எங்கப்பா பேசரபோதெல்லாம் விழுந்து விழுந்து சிரிப்பான். அதனுலேயே கக்ஷிக்காராள்ளாம் எங்கப்பாவைத்தான் வைக்கரது," என்று பலவிதமாக அந்த சர்ப்புத்திரன் தன் தகப்பனுர் பிரதாபத்தைச் சொல்லி முடிக்குமுன் பொழுது போயிற்று. பொத்தாமரையும் பார்க்கவில்லை. வீடு திரும்பினேம்.

நான் வருவதை எதிர்பார்த்துக் கொண்

டிருந்த அய்யர், "என் இவ்வளவு தாமஸம் கோவிலுக்குப் போக வேண்டாமா. உங்களுக் காகன்னு காத்திருக்கேன். இன்னிக்குக் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை, அம்பாளுக்கு அலங்காரம் ரொம்ப அழகாயிருக்கும். பாக் கரத்துக்குப் பதினாயிரம் கண் வேணுமே," என்று பக்தி பரவசராய், எனக்குப் பத்து நிமிஷம்கூட உட்கார்ந்து இளைப்பார இடம் கொடாமல் கிளம்பி விட்டார். கிளம்பினது தான் அவசரமே யொழிய வழியில் அடிக் கொரு தரம் நின்று கொண்டு எதிர்ப்பட்ட வர்களை யோக க்ஷேமம் விசாரிப்பதிலும், பட்டணத்திலிருந்து வந்திருக்கும் சிநேகி தரை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும், முனிசிப்பாலிட்டிகாரர்கள் பண்ணும் அக்கிர மத்தைப்பத்தி ஆத்திரப் பிரசங்கம் பண்ணு வதிலும் சுமார் ஒருமணி கழிந்தது. கோவிலை யடைந்தோம். அர்ச்சனைக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு உள்ளே போனோம். சந்நிதியில் ஏராளக் கூட்டம். அத னால் 'கோவிலைச் சற்று சுத்திப் பார்த்து வர லாமே, புது மண்டபம் ரொம்ப விமரிசை யென்று சொல்லுகிறார்களே, அதைப் பார்த் தால் தேவலை'யென்று மெதுவாய்ச் சொன் னேன். 'சரியாய்ப் போச்சு, இது ஒரு கூட் டமா, இதோ ஒரு நிமிஷம் வழி ஏற்பாடு பண்ணரேன் பாருங்கோ, புது மண்டபம் கிது மண்டபமெல்லாம நாளைக்குப் பாத்துக் கலாம்னு' என்று சொல்லிக் கொண்டே நாலு அட்டில் டிரஸ்டி ஆபீசுக்குப் போய் அங்கே யிருந்த குமாஸ்தாவை ஏதோ காதைக் கடித் தார். அவன் உடனே டவாலிபோட்ட சேவ கன் ஒருவனை அனுப்பினான். அந்த கிங்கரன், பெண்பிள்ளைகள் என்றுகூடப் பார்க்காமல் தீபாராதனைக்குக் காத்திருந்த ஜனங்களைத் தள்ளி வழிபண்ணி எங்களை கர்ப்பக்கிருகம் சேர்த்து விட்டான். அங்கே சாம்பிராணிப் புகையும், அடைசலும் மூச்சுமுட்டி விடும் போல் ஆகிவிட்டது. உள்ளே வந்த துக் கம் ஒருபுறம், மூச்சுத் திணறல் ஒரு புறம், எனக்கு தீபாராதனையில் மனது செல்லவில்லை. அய்யரோ பக்கத்தில் நின்று அம்மன் அலங்காரத்தையும், விலைமதிக்க முடி யாத ஆபரணங்களையும், பூஜா ஸம்பிரதாயங் களையும் ஸாங்கோபாங்கமாய் எனக்கு எடுத் துச் சொன்ன வண்ணம் இருந்தார். அதனால் கொஞ்சநஞ்சம் மனதைச் சிதறவிடாமல் செய்யும் பிரயத்தினமும் கெட்டுப்போயிற்று. வெளியே வந்தோம். மணி ஒன்பது. 'திண் டுக்கல் போகும் ரயில் எத்தனை மணிக்கு' என்று கேட்டேன். 'ஏன், பதினொரு மணிக்கு,' என்றார். சடாரென்று ஒரு யோசனை தோணிற்று. "நாளைக்குப் பழனி வருவதாக ஒரு சிநேகிதரிடம் சொல்லி யிருக்கிறேன். அவர் கோயமுத்தூரிலிருந்து வருகிறார். அவரைக் காக்க வைக்கப்படாது. ஆகையால் இந்த ரயிலுக்கே போக வேணும்" என்றேன். அவர் வெகுசாய்த் தடுத்துப் பார்த்தார். நான் அவர் வார்த்தைகளுக்கு இடம் கொடுக்க வில்லை. சீக்கிரம் வீடு வந்து சாப்பிட்டு ரயி லுக்குக் கிளம்பினேன். அய்யர் வழியனுப்ப வருவாரோ என்று பயம்தான். நல்லவேளை யாய் அநேக உபசாரங்கள் சொல்லி வண்டி யில் ஏற்றினதோடு நின்று விட்டார். ஸ்டேஷ னுக்கு வந்தேன். 'ரிடைரிங் ரூம்'களில் ஒன்று வாடகைக்கு எடுத்துக் கொண்டு ராத்திரிக் கவலையில்லாமல் தூங்கினேன்!

மறுநாள் புது மண்டபம், பொத்தாமரை, அழகர் கோயில், திருப்பரங்குன்றம் எல்லாம் பார்த்து விட்டு இரவு வண்டிக்கு திண்டுக்கல் போய்ச் சேர்ந்தேன். அய்யர் கண்ணில் பட வில்லை. அது முதல் வெளியே போனால் பிறர் வீட்டில் தங்குவதில்லை என்ற தீர்மானம் பண்ணினேன்" என்று கிருஷ்ணய்யர் கதையை முடித்தார்.

ஆசிரியர் அறிக்கை

"பாரதமணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட் டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

அறிக்கை

"பாரதமணி" நிர்வாக சம்பந்தமான எல்லா கடிதப் போக்கு வரத்துக்களும், விளம் பரங்கள், பிளாக்குகள், யாவும் "மானேஜர்" பாரதமணி, 7 வடக்கு மாடவீதி, மைலாபூர் சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். விளம்பரங்கள் யாவும் புதன்கிழ மைக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். பாரதமணியில் மதிப்புரைக் கு அனுப்பப்படும் புத்தகங்களும் மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆசிரியர் விலா சத்திற்கு அனுப்பவேண்டும்.

மானேஜர்.

சிறுகதை

சந்தோஷம்

(எஸ். குஞ்சிதபாதம்.)

"அமுதம்! அமுதம்! வூட்டிலே யாரு, ஒருத்தருமில்லே?"

"யாரது கதவைப் போட்டு உடைக்கரது?"

"அமுதம்! அமுதம்!"

"ஏன் சொல்லேன்?"

"கதவைத் தெற."

குடிசையின் கதவு திறந்தது. அமிர்தம் வெளியில் வந்தாள். பஞ்சவர்ணம் துடிதுடித்துக்கொண்டு நின்றாள்.

"ஏண்டி பஞ்சவர்ணம்!"

"வேப்பெண்ணெ இருந்தால் கொஞ்சூண்டு கொடேன்."

"இருக்குதோ பார்க்கறேன்"

அமிர்தம் உள்ளே சென்றாள். ஒரு அழுக்கடைந்த கண்ணாடிப் புட்டியை கொணர்ந்தாள். அதிலிருந்து கொஞ்சம் பஞ்சவர்ணத்தின் கையிலிருந்த கொட்டாங்கச்சியில் ஊற்றினாள்.

"ஏதுக்காவ பஞ்சவர்ணம்?"

வாயேன் வூட்டுக்கு! கணே வந்துட்டுதடி. தெக்கத்திக் கணே. புள்ளே கண்ணு மூடிப் போச்சு. எப்பொ தெறக்குமோ அந்த செல்லியம்மனுக்குத்தான் தெரியும்."

"ஐயோ பாவமே! முந்தாநாளு உடம்பு நல்லா யிருந்துச்சே. அதுக் குள்ளாற யுமா திருப்பிக்கிட்டுது. போ இதோ வந்துட்டேன்."

அமிர்தம் உள்ளே போனாள்; பஞ்சவர்ணம் திரும்பினாள். நாலைந்து குடிசைகள் தாண்டி ஒரு குடிசையில் நுழைந்தாள். ஒரு கிழிந்துபோன கோரைப் பாயின் மேல் ஒரு குழந்தை கிடந்தது. ஒரு கிழவி அதன்மேல் ஈ உட்காராமல் கையால் விசிறிக்கொண்டிருந்தாள்.

"பஞ்சவர்ணம்! வேப்பெண்ணெய் வாங்கியாந்தியா?"

"வாங்கியாந்தேன் ஆத்தா."

"இரண்டு சுள்ளியைப்போட்டு அடுப்பு மூட்டி, சூடு பண்ணு போ. நிக்காதே, ஒத்தடம் கொடுக்கவேணும்." பஞ்சவர்ணம் உள்ளே சென்றாள். அமிர்தம் வந்தாள்.

"ஏன் ஆயா! எப்படி இருக்குது புள்ளெக்கு?"

"யாரது, அமுதமா? வாம்மா! என்னமோ அந்த ஈசுவரன்தான் பாத்துக்கணும். அடியே, பஞ்சவர்ணம், இங்கிட்டு வா!"

பஞ்சவர்ணம் வந்தாள்.

"சுட்டுப் போச்சா?"

"இப்பதானே அடுப்பிலே வெச்சேன், சத்த நாளியாவது ஆகவோணுமா?"

"ஆயா! கோளி முட்டே ரெண்டை ஒடச்சு கருவை எடுத்து கொடுத்தா தேவலே. என்ன சொல்றீங்க?"

"கோளி முட்டையா! ஐயோ! நம்ம ஊட்டுக் கோளி குஞ்சு பொறிச்சுடுச்சே; உன் வூட்டிலே இருக்குதா முட்டே, என் அமுதம்?"

"இல்லையே!"

"அட பாவமே என்ன செய்யரது, வேறே யாருகிட்டே இருக்குது?"

"ஒருவேளே புதுச்சேரியாரு வூட்டிலே இருக்குமோ என்னவோ, பஞ்ச வர்ணம்! நீ போயேன்."

பஞ்சவர்ணம் போனாள்.

"என்னங்கரே, சேரிலே இம்புட்டு வூடு இருக்குது. வூட்டுக்கு மூணு, நாலு கோளிங்க இருக்குது. முட்டையில்லாம யா போயிடும்? ஒன்னோடே அந்தக் கருப்புப் பெட்டை என்ன ஆச்சு, என் அமுதம்?"

"ஆயா! முட்டே நிறய இருந்துச்சு. எல்லாத்தையும் அவங்க கொண்டுக்கிட்டு போயி அய்யா வூட்டிலே கொடுத்துவிட்டு வந்திட்டாங்க"

"ஐயா வூட்டிலேயா! என்ன இது. அவுங்க முட்டே சாப்பிடுவாங்களா?"

"சின்னய்யா வந்திருக்காங்க பாரு, அவங்களுக்கு இரும்புதாம். இரும்ப

லுக்காக டாக்குடர் ஐயா முட்டே சாப்பிடச் சொல்றுங்களாம்."

"என்னது அதிசயத்தே! அய்யா மாருங்கவும் முட்டே தின்னு அப்புறம் என்னடி மேங்குலம், கீழ்ங்குலம் எங்க றது ?"

பஞ்சவர்ணம் இரண்டு முட்டை களைக் கொண்டுவந்தாள். அமிர்தம் அவை களை உடைத்து ஒரு சங்கில் ஊற்றினாள். மஞ்சள் கருவை எடுத்து எறிந்துவிட்டு, குழந்தையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு அதன் வாயில் புகட்டினாள். உள்ளே செல்லவில்லை. எதிர்த்து வழிந் தது.

"பஞ்சவர்ணம்! உள்ளாற வேப் பெண்ணெ சுட்டுப் போயிருக்கும் பாரு. ஆயா! இதெப்போட்ட முடியாது. வளிஞ்சு போவுது."

"அமுர்தம்! என்னடி செய்வேன் ? எங்கண்ணு! பேரப்புள்ளெயே பாத்திட்டு செத்துப்போவணும்னு நெனச் சேன். பாத்தாச்சு நான் இருக்கக்குள் ளேயே அது போயிருச்சுனு என் மனசு என்ன பாடுபடும் ?"

"அளுவாதே ஆயா! என்னங்க நாம்ப செய்யலாம் ?"

"ஏன் நிக்கரே பஞ்சவர்ணம்! போ! போ! நம்பளாலே என்ன முடியும் ? நம்ப தலையிலே அவ்வளவுதான் எளுதிருக்கான்."

பஞ்ச வர்ணம் அழுது கொண்டே உள்ளே சென்றாள். எண்ணெய் தாளத் தில் தன், தனவென்று கொதித் துக் கொண்டிருந்தது. ஒரு விராட்டியை எடுத்து வைத்துச் சட்டியின் இரண்டு புறங்களையும் பிடித்துக்கொண்டு தூக்கி னாள். அவள் காலில் கொஞ்சம் தெரித்து விட்டது. சட்டியைக் கீழே வைத்து விட்டுக் காலைத் தடவிக்கொண்டு உட்கார்ந்தாள்.

"பஞ்சவர்ணம் !"

வெளியிலிருந்து கூப்பாடு வந்தது.

"கொண்டாரேன், கொண்டாரேன்."

"பாரு, கந்தத்துணி இருக்குதாண்ணு! கொஞ்சம் துணி எடுத்துக்கிட்டுவா !"

பஞ்சவர்ணம் தேடினாள். கந்தைத்துணி கிடைக்கவில்லை.

"இல்லையே ஆயா, துணி."

"இல்லேன்னுக்கா! எப்படி ஒத்தடம் கொடுக்கபோறே."

"எடுத்துட்டுவாரேன் இதோ."

பஞ்சவர்ணம் தன் புடவையைக் கிழித்து, அந்தத்துணியால் சட்டியைப் பிடித்துத் தூக்கிக் கொண்டுவந்தாள். அமிர்தம் குழந்தையை வெளிச்சத் திற்குக் கொண்டுவந்தாள். கிழவி கிழிந்த கோரைப் பாயைக் கொண்டுவந்து ஈரமாக இருந்த அந்த இடத்தில் போட்டாள். அமிர்தம் குழந்தையை அதன் மேல் கிடத்தினாள்.

"ஆயா! ஒத்துங்கரேன் ஒங்கையாலே! பறந்து போயிடும் சீக்கு. இது கடக்குது."

"என்னடி செய்யறது அமுதம்! எங் தலையிலே மண்ணெ வாரிப் போடப் போவுது."

"அளாதே ஆயா! அழுதாலே என்ன சாதிக்க முடியும் ?" ஒத்தக்கா, ஒத்து. அமுதம், இதோ இருக்குது பாரு துணி."

"கொண்டா இப்படி!"

அமிர்தம் துணியைக் கிழித்து மடித்து எண்ணெயில் தோய்த்துப் பிழிந்து சூட்டுடன் அதைக் குழந்தையின் கால்களி லும் நெற்றியிலும் ஒற்றினாள். இன்னொரு துணியை நனைத்துக் கொடுத்தாள் பஞ்சவர்ணம். மாற்றி மாற்றி ஒத்தினாள் அமிர்தம். குழந்தை அழவே யில்லை. கண் மூடி திறந்தது. கண் விழிகள் சொருகிக் கொண்டன.

பஞ்சவர்ணம் அழ ஆரம்பித்தாள். அமிர்தம் அவளைப் பார்த்து. "அளுவாதே பஞ்சவர்ணம், நீ அளுதா நான் என்ன செய்யறது? தைரியமா இரு." பஞ்சவர்ணத்தின் புடவைத் தலைப்புக் கிழிந்திருந்ததைப் பார்த்தாள் அமிர்தம்.

"ஐயோ! புடவையை பிடிச்சு கிளிச்சுட்டாயே !"

"ஆமா ஒரு மாச நடவு கூலி. பிரமாத மூணு ரூவாக் காசு. வேறே வாங்கிடலாம்."

இதைக்கேட்டதும் அமிர்தத்தின் கண் களில் நீர்த்துளிகள் அரும்பின.

"இன்னொரு தரம் காய்ச்சி ஒத்து. வூட்டிலே வேலெ கிடக்குது. பஞ்சவர் ணம். வா! இன்னங் கொஞ்சம் வேப்

பெண்ணெய் கொண்டுகிட்டு வா! நான் வயலுக்கு போவணும்'' என்று சட்டென்று பேச்சைத் திருப்பினுள் அமிர்தம்.

"சரி! ஏன் ஆயா! அவங்களுக்கு வயலுக்கு கஞ்சி கொண்டுட்டு போவலியே. என்ன செய்யறது அமுதம்! நீ எடுத்திட்டுப் போவயா!'' என்று கேட்டாள் பஞ்சவர்ணம்.

அமிர்தம் பேசாமல் எழுந்து நின்ருள்.

"ஏண்டி அமுதம் என்னடி சொல்றே?

"இல்லே ஆயா! வெக்கமா இருக்குது. அவங்களோடே நான் பேசினது கூட இல்லே.''

"ஏன்? ஒம் புருஷனுக்கு எடுத்துட்டுப் போருயோ, இல்லேயோ?

"இன்னும் போவல்லே. காலமே பழைய சோறு தின்னுட்டுப் போனவங்கதான். இதோ போவப் போறேன்.''

"ஏன் ஆயா! நான் எடுத்துட்டுப் போவறேனே. அமுதத்து அக்காதான் என்னமோ கிராக்கி பண்ணிக்கிருளே.''

"கிராக்கி என்னடி எனக்கு கிராக்கி? நான் எடுத்திட்டுப் போறது நல்லா இருக்குமா, நீங்க சொல்லுங்க ஆயா!''

"எல்லாம் போவலாம்: ஒம் புருசங் கிட்ட கொடுத்துடேன். அவன் கொடுத்துடருன்.''

"சரி.''

அமிர்தத்தினிடம் ஒரு சோற்று மூட்டை கட்டிக் கொடுத்தாள் பஞ்சவர்ணம். அமிர்தம் எடுத்துக்கொண்டு செல்ல பஞ்சவர்ணமும் கூடவே போனுள்.

பஞ்சவர்ணம் வேப்பெண்ணெய் போத்தலே அமிர்தத்தின் குடிசையிலிருந்து கொணர்ந்தாள். மறுபடியும் எண்ணெயைக் காய்ச்சி ஒத்தடம் கொடுக்கலானுள். குழந்தைக்கு பிரக்ஞை வரவே யில்லே. அழுது கொண்டே மாமியும் மருகியும் உட்கார்ந்திருந்தார்கள்.

அமிர்தம் இரண்டு சோற்று மூட்டைகளேயும் வெற்றிலேப் பாக்கு நிறைந்த பைகளேயும் எடுத்துக்கொண்டு வயலே நோக்கி நடந்தாள்.

சில வயல்களில் புதிய நாற்றுகள் காற்றில் அலேந்துகொண்டு இருந்தன. சில வயல்களில் உழவர்கள் பஞ்சையான மாடுகளேக் கலப்பையில் பூட்டி உழுது கொண்டிருந்தனர். வாய்க்கால்களில் தண்ணீர் நிரம்பி இருந்தது. எவ்வளவு சுறு சுறுப்புடன் சாகுபடி காலத்தில் உழவர்களும், நடும் ஸ்திரீகளும் உழைக்கிருர்கள்? ஒரு ஸ்திரீக்கு ஒரு நாள்முழுதும் வெயிலில் குனிந்து கொண்டு இடுப்பொடிய நடுவதற்குக் கூலி ஒரு குறுணி. பெருமானம் இரண்டணு!

மாடுகளோ கேட்கவேண்டாம், அவ்வளவு மோசமானவை. உழவுக்கு எல்லாத் தொழிலாளர்களேயும் விட மிக மிகக் குறைந்த ஊழியம் கிடைக்கும்பொழுது அவர்கள் நல்ல மாடுகளாக வாங்கிக்கொள்வது எவ்வாறு முடியும்? மாடுகளுக்கு தீனிதான் எவ்வாறு போட முடியும்? நல்ல மாடுகளாக வாங்கி இம்மாதிரி நாள் முழுதும் கலப்பைகளில் பிணேத்து, வெயிலில் அவைகளே வேலே வாங்கி, தீனியும் போடாமல் இருந்தால் அவைகள் என்னவாகும்? அவை என்னவானுலென்ன, உழவர்களுக்கு நஷ்டம் தானே ஏற்படும்? "ஈசுவரா! எனக்கு மறு பிறப்பு உண்டென்ருல் எந்தப் பிறவியையும் நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன், உழவு மாடாகமட்டும் என்னேப் படைத்து விடாதே'' என்று உழவு மாடு ஒன்றைப் பார்த்த எந்த மனிதனும் பிரார்த்தனே செய்துகொள்வான்.

தேசத்தின் உணவு இப்படி மனிதனும் மாடும் சேர்ந்து உழைத்த உழைப்பால் இங்கே உற்பத்தியாகிறது. உணவை உற்பத்தி செய்தவர்கள் பட்டினி கிடந்து காலம் கழிக்கிருர்கள். சீட்டாடிக்கொண்டும், கடன் வாங்கிச் செலவழித்துவிட்டுத் தூங்கும் சுகவாசிகள் இந்த எளிய மக்களேக் கண்ணெடுத்தும் பார்ப்பது கிடையாது! அவர்களுக்கு ஒரே குறிப்புத்தான். அறுவடையாக வேண்டும். நெல்லே வியாபாரிக்கனுப்பவேண்டும். பணத்தை தனக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அமிர்தம் வயலுக்கு வந்தாள். ஒரு கருவேல மரத்தடியில் தலேயிலிருந்த இரண்டு சோற்று மூட்டைகளேயும் இறக்கிவைத்து விட்டு உட்கார்ந்து பாக்கு வெற்றிலே மெல்ல ஆரம்பித்தாள். இன்னெரு கரு

வேல மரத்தடியில் பஞ்சவர்ணத்தின் புருஷன் வேலன் உட்கார்ந்து தன் மனைவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அடிக்கடி அமிர்தத்தை பார்த்துப் பார்த்துத் திரும்பினான்.

சிறிது நாழிகைக்கெல்லாம் அமிர்தத்தின் புருஷன் அங்கே வந்தான். அவனிடம் அமிர்தம் சொன்னாள்: "பஞ்சவர்ணம் அவ புருசனுக்கும் சோறு கொடுத்தனுப்பினா. அவங்களை கூப்பிடுங்க."

"ஏன்? அவளுக்கு என்ன வரத்துக்கு?"

"ஒங்களுக்குத் தெரியாதுங்களா சேதி! கொளந்தைப் புள்ளெக்கு கணெ வந்திடுச்சு, தெக்கத்திக்கணை. வுடம்பெல்லாம் நெஞ்சு போயிருச்சு, இம்புட்டு நேரம் ஒத்தடம் கொடுத்திட்டிருந்தேன். இன்னமும் அவகிட்டச் சொல்லி கொடுக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன்."

"யே! வேலா இங்கிட்டுவா!"

வேலன் வந்தான்.

"என்னடா உடம்பு ஒன் சின்னப் புள்ளெக்கி?"

"தெரில்லியே."

"கணெ வந்திருக்காமில்லே."

"முந்தாநா வந்திச்சு. இப்பொ என்னமா இருக்குதோ."

"சாஸ்தியா இருக்குதாம். ஏன், உன்னெத்தானே, எங்கிட்டோ பாக்கிறியே, சொல்லு எப்படி இருக்குது?"

"அதிக்க் காச்சல்தான். பயமாத்தான் இருக்குது. அவங்ககிட்ட சொல்லுங்க, அவங்க பொஞ்சாதி சோறு கொடுத்து அனுப்பினா."

"வேலா சோறு அனுப்பி யிருக்காடா, ஒம் பொஞ்சாதி!"

"மத்தியான வேலே வாணும். நான் ஊட்டுக்குப் போறேன்."

"பண்ணெ ஐயாவெக் கேக்க வாணுமா?"

"நீ என்னுங்கரே! ஆவத்து சம்பத்து யாருக்கும் உள்ளது தானே. திட்டுவாரு, கேக்காம போறேண்ணு. கிடக்கிறுங்க, வேலேயே பாரு. எதுக்குத்தான் திட்டல்லே. நான் போறேன். என் சோறு எங்கே? சரி எடுத்துக்கிடரேன்."

"நீ போறயா?"

"வரேண்ணே? சரியா இருந்திச்சுண்ணு என்னமோ அந்த மாரியாத்தா காப்பாத்தினு எண்ணு நினெச்சுக்கரேன். இல்லே..."

"போடா, வேலா தைரியமா போ!"

வேலன் வந்தான் குடிசைக்கு. குடிசையில் சப்தமே இல்லே. கதவு தாளிடப்பட்டிருந்தது. அவன் மனம் திக் திக் என்று அடித்துக்கொண்டது. பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்றான். உள்ளிருந்து வேப்பெண்ணை நாற்றம் அடித்துக்கொண்டிருந்தது. குழந்தை இருக்கிறதோ போய் விட்டதோ என்று அவனுக்குத் தெரியவில்லை. கதவை மெதுவாக இரண்டு முறை தட்டினான். கதவின் சங்கிலி கழலும் சப்தம் கேட்டது. பஞ்சவர்ணம் கதவைத் திறந்தாள். வேலன் முகத்தில் கலவரம் குடி கொண்டிருந்தது.

"ஏன் வந்துட்டிங்க?"

"எப்படி இருக்குது புள்ளெக்கு?"

"உஷ்! மெதுவாக பேசுங்க. தூங்குதுகுளந்தே." ஒரு மூங்கில் தொட்டிலில் குழந்தை தூங்கியது. கிழவி மெதுவாக அதை ஆட்டிக் கொண்டிருந்தாள். கிழவி தன் மகனைப் பார்த்தாள்.

"ஆயா!"

"பேசிக்கிட்டதுரா. பயமில்லே. சரியாப்போச்சு. அவருகூட, ஆமாண்டா புதுச்சேரியாரு வந்து பாத்தாரு. 'பயமில்லே போ' எண்ணாரு. என் வயத்திலே பாலு வாத்தாச்சு."

வேலன் தொட்டிலின் அருகில் சென்று இரண்டு கயிறுகளையும் பிடித்துக்கொண்டு குழந்தையைப் பார்த்தான். பஞ்சவர்ணம் எதிர்ப்புறத்தில் இருகயிறுகளையும் பிடித்துக்கொண்டு நின்றாள். வேலன் தலை நிமிர்ந்து அவளை வாத்ஸல்யத்துடன் பார்த்தான். கவலை தோய்ந்த பஞ்சவர்ணத்தின் முகம் சரேலென்று சிவந்தது. அதற்கப்புறம் அதில் ஒரு புன்னகை தவழ்வதை வேலன் கடைக்கண்ணால் கவனியாதது போல் கவனித்தான்.

கலையும் ஒழுக்கமும்

(வ. ரா.)

அந்திப் பொழுது ; கல்கத்தா வீதியில், பழைய நவாப் வமிசத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் 'பேடா' போய்க்கொண்டிருக்கிருர். மிகவும் கம்பீரமான நடை; நிதானமான போக்கு. இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில், அவரிடம் அவரது வேலையாட்களில் ஒருவன் ஓடிவந்து. "அரண்மனை தீப்பிடித்து எரியுதுங்க !" என்ருன். "சரி போ" என்ருர் நவாப். மறுபடியும் சிறிது நேரத்துக்கெல்லாம், அதே ஆள் வியர்க்க வியர்க்க ஓடி வந்து, "அரண்மனை பாதி போய்விட்டது" என்ருன். "சரி போ" என்ருர் நவாப். மூன்ரும் முறையாக ஆள்வந்தான்; அரண்மனை எரிந்து சாம்பலாகிவிட்டது" என்ருன். "அப்படியா ? மூன்று மூங்கில் குச்சிகள் போய்விடுகின்றன என்பதற்காக மூதாதைகளின் நடையை என்னல் விட்டுவிட முடியுமா ?" என்ருர் நவாப்.

முன்னேர்களிடம் பக்தி வேண்டியது தான். ஆனல் அந்த பக்தியினலே புத்தி கெட்டுப் போய்விடக்கூடாது. அந்த பக்தியினலே, புத்தி வளர்ந்தால்தான், பக்தியை வைத்துக் கொள்ளலாம். புத்தியை மழுங்கச் செய்யும் பக்தி முட்டாள்தனமாகும். அதற்கு பக்தி என்று பெயர் அல்ல.

கலையால் உண்மையாகவே ஒழுக்கம் கெடுகின்றதா என்பதைப்பற்றி, நன்ருக யோசிக்கவேண்டும். கலை என்பது என்ன ? ஒழுக்கம் என்பது என்ன என்பதைப்பற்றியும் தெளிவாக யோசிக்க வேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் விரும்புவது இன்பம். எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் ஆசைப்படுகிருன். இந்த ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியவைகள் சங்கீதம், சிற்பம், நர்த்தனம், நாடகம் முதலிய கலைகள் என்று ஒரு கட்சியார் சொல்லுகிருர்கள். ஆனல் இன்னெரு கட்சியார் என்ன சொல்லுகிருர்கள் என்ருல், "எதற்கும் ஆதாரமாயிருப்பது சக்தி ; அந்த சக்தியை சேர்ப்பதுதான் புத்தி சாலித்தனம். சக்தியைச் சேர்த்துக்கொள்ளாமல், வெறும் ஆநந்தத்தை அனுபவிக்கப் பார்ப்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை வைப்பதற்குச் சமானமாகும். மேலும் இன்பம் என்பதே ஒருவித மயக்க வஸ்துவாகும். போதையை விரும்புவது கூடாது" என்று அவர்கள் சொல்லுகிருர்கள்.

வெறும் மயக்கத்தைக் கொடுக்கும் இன்பத்தை நாடுவது வீணன வேலை என்று

நண்பர்களுக்கு

கிராமாந்திர விஷயமாகவும், இந்தப் பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாகவும் நண்பர்களுக்குத் தோன்றும் யோசனைகளை எழுதி யனுப்புவதற்கு வசதி கொடுத்து பாரதமணியில் ஒரு தனிப் பக்கம் ஒதுக்குவதாகத் தீர்மானித்திருக்கிருேம். நண்பர்கள் அனுப்பும் யோசனைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிருேம். முக்கியமாக கிராம முன்னேற்ற விஷயமாக எல்லா விதமான தகவல்களும் அனுப்பலாம்.

ஆசிரியர்.

அறிவிப்பு

"பாரதமணி" வாரப்பதிப்பு இந்தியா, இலங்கை, பர்மா முதலிய விடங்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளிடம் கிடைக்கும். சென்னை நகரில் எல்லா டிவிஷன்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டு கடைகளில் கிடைக்கும். உங்களுக்குப் "பாரதமணி" இதழ் கிடைக்க ஏதாவது அசௌகரியப்பட்டால் மானேஜர், பாரதமணி, 7, வடக்கு மாடவீதி, மைலாபூர், சென்னை என்ற விலாசத்திற்கு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள். பாரத மணி உங்கள் இருப்பிடம் வந்து சேரும்.

பாரதமணியை விற்க விரும்பும் ஏஜண்டுகள் மானேஜருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மானேஜர்.

யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையைப்போல், சக்தியை எதிர் பார்த்து இன்பத்தை இழக்கவேண்டுமா என்று சிலர் ஆத்திரப் படலாம். கலாரஸிகர்களுக்கும் ஒழுக்கத்தை வற்புறுத்துகிற வர்களுக்கும் உள்ள மாறுபாடான எண்ணம் இதுதான். ஆகவே நாம் யோசிக்க வேண்டியது என்ன ? கலைகளின் மூலமாக உண்மையான சக்தி ஏற்படுமா ? ஒழுக்கத்தின் மூலமாக, இன்பம் உண்டாகுமா ? இவை இரண்டையும் யோசிக்கவேண்டும்.

சிற்றின்பத்தை வெறுக்கும் சிவ பக்தர்கள் கூட, என்ன செய்கிறார்கள் தெரியுமா ? அர்த்தநாரீசுரரான பரமசிவனை போற்றுகின்றார்கள். பார்வதி சமேதரான பரமேசுவரனைத் துதிக்கின்றார்கள். பார்வதி பெண் ; பரமசிவன் ஆண். வெறும் ஆண் பெண் சேர்க்கையை சிற்றின்பம் என்று சொல்லும் பக்தர்கள், பார்வதி, பரமேசுவரன் என்று ஆண், பெண்ணாகப் படைத்து, பாவித்து, கடவுளை ஸ்தோத்திரம் செய்கிறார்கள். ஆகவே, ஆணும் பெண்ணும் சேர்ந்தால் மட்டும் சிற்றின்பம் அல்ல என்பது தெளிவாக வில்லையா ? சக்திஸ்வரூபமான ஆணும் பெண்ணும் கூடினால், சிற்றின்பம் பேரின்பமாதல் கூடும் என்று தெரிகிறதல்லவா ? வல்லமை இல்லாத பொருள்கள் கூடினால், பூசலும் இன்ப மயக்கமும் ஏற்படும். ஆனால் வல்லமை பொருந்திய உயிர்கள் கூடினால், ஆனந்தம் உண்டாவது நிச்சயம். இதைத்தான் பார்வதி பரமேசுவரன் என்ற அர்த்தநாரீசுர உபமானம் காண்பிக்கிறது.

ஆகவே, இயற்கையின் நுட்பங்களை அறிந்த பெரியார்கள், கலைகளைத் தள்ளுவதில்லை ; ஒழுக்கத்தையும் இகழ்வதில்லை. பார்வதி பரமேசுவரனை சேர்த்து, எப்படி ஜனங்கள் ஸ்மரணை செய்கிறார்களோ, அதேபோல, கலையையும் ஒழுக்கத்தையும் சேர்த்து, வாழ்க்கையில் பொருத்தி, நடத்திக் காண்பிக்கின்றார்கள். ஆகவே, எத்தகைய கலைவேண்டும் ? எவ்வித ஒழுக்கம் வேண்டும் ?

முன்னொரு காலத்தில், பிரம்மாவுக்கு ஒரு ஆசை உண்டாயிற்று. என்ன ஆசை? இதுவரையிலும் படைத்த பெண்ணைக் காட்டிலும் உயர்ந்த பெண்ணைப் படைக்க வேண்டும் என்று அவருக்கு ஆசை. அந்த ஆசை உடனே பூர்த்தியாயிற்று. அந்தப் பெண்ணுக்கு அகல்யை என்று பெயரிட்டார். யார் எல்லா உலகங்களையும் மூன்றே முக்கால் நாழிகைக்குள் சுற்றித் தம்மிடம் வந்து அகல்யையை கேட்கிறார்களோ, அந்தப் புருஷனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதாக பிரம்மா விளம்பரப் படுத்திவிட்டார். தேவேந்திரன் முதல் எல்லா தேவதைகளும் தத்தம் வாகனத்தில் ஏறி, உலகங்களைச் சுற்றி வந்தார்கள். ஆனால் கௌதம முனி என்ற தவசிரேஷ்டர் தமது ஆத்ம ஞான மகிமையால், பந்தயத்தில் ஜயித்து, பெண்ணைக் கேட்டார். பிரம்மா அகல்யையை கௌதம முனிக்கு பாணிக்ரகணம் செய்து கொடுத்துவிட்டார்.

அகல்யை கௌதமரோடு வாழ முடியாமல் கல்லாய்ச் சமைந்த கதை உங்களுக்குத் தெரியும். ஸ்ரீராமனுடைய பாத தூளி பட்டு, கல்லாய்ச் சமைந்து கிடந்த அகல்யை உயிர் பெற்று எழுந்தாள். ஒழுக்கத்தில் கௌதம முனியும் சரி, ஸ்ரீராமனும் சரி, நிகரற்றவர்கள் என்று சொல்லலாம். அகல்யை என்ற இயற்கைக் கலை, கௌதம முனியின் நல்லொழுக்கம் என்ற கொடிய தீயால் அழிக்கப்பட்டுப் போய்விட்டது. ஆனால் ஸ்ரீராமனது ஒழுக்கம் என்ற கருணை வெள்ளப்பெருக்கால், அகல்யை என்ற கலை உயிர் பெற்று எழுந்து விட்டது. ஆகவே, எந்த ஒழுக்கத்துக்கும் கலைக்கும் விரோதம், எந்த ஒழுக்கத்துக்கும் கலைக்கும் தீவிர நட்பு என்பதற்கு, மேலே சொன்ன கதையை கொஞ்சம் கிளறிப் பார்க்கலாம். தன்னைத் தானே காப்பாற்றிக்கொண்டு, உலகத்தைப்பற்றி சிந்தனையில்லாமல் ஆத்ம ஞானம் பெற்று அதன் மூலமாக ஒழுக்கத்தை நாடும் மனிதனுக்கு கலை பிடிக்காது. அவன் மூலமாக, கலை நசித்துப் போகும். ஏன்? ஆதரவு இல்லாமையாலே.

உலகத்தைப் பாதுகாக்கும் லட்சியத்தையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தை நாடும் ஸ்ரீராமனைப் போன்ற வீரர்களின் மூலமாக கலை பெருக்கடையும் என்பதில் சந்தேகமில்லை. நல்லொழுக்கத்துக்கு அடிப்படையாக இருக்கும்

மனோ பாவத்தில் வித்தியாசங்கள் உண்டு என்பது கௌதமன் ராமன் என்ற இரண்டு பெரியார்களிடமிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. வாழ்கை பொய் என்ற ஆத்ம ஞானத்தால் ஏற்படும் நல்லொழுக்கத்தால், கலைகள் யாவும் சாகத்தான் செய்யும். ஆனால் வாழ்க்கை என்பது சக்தி, வாழ்க்கை என்பது ஆநந்தம், வாழ்க்கை என்பது லீலா விநோதங்கள் என்ற ஞானத்தால் ஏற்படும் நல்லொழுக்கம் என்ற பாதுகாப்பு கலைகளை வளர்த்துக் காக்கும் வேலிகளாக அமையும். சௌரியத்தோடும் சக்தியோடும் அன்போடும் கூடிய நல்லொழுக்கம் என்ற பாத்தியிலே, கலைகள் என்ற பயிர்கள் செழிப்பாகப் பயிராகின்றன.

எல்லாம் பாழ் என்று மனித வர்க்கத்தின் பேரிலும் பொதுவாக ஜீவராசிகளின் பேரிலும் வெறுப்பு ஏற்பட்டதன் காரணமாக உண்டாகும் நல்லொழுக்கம் கலைகள் என்ற பயிரைத் தீய்த்து மாய்த்துவிடும்.

இன்பத்தால் மனிதன் பலவீனம் அடையக் கூடாது. பலவீனத்தை விருத்தி செய்யும் இன்பத்துக்கு விதையாக இருக்கும் கலைகள் மனிதவர்க்கத்துக்குத் தேவையில்லை. ஆனால் ஒழுக்கம் என்ற சாக்கிலே, மனிதன் பாசாங்குப் பிண்டமாகி, தனது உண்மையான வல்லமையை இழப்பானாகில், அந்த ஒழுக்கமும் மனித வர்க்கத்துக்கு தேவையில்லை. உயிர்ப்பசை இல்லாத ஒழுக்கம் இயந்திரத்தின் போக்கைப் போல, சாரமில்லாத சங்கதியாகும். ஞானச்சாந்து இல்லாத கலையால், மனிதன் உயர்வதில்லை. மனிதன் மிருகப்பிராயம் எய்தி, ஆகாரம் நித்திரை போன்றவைகளில் உழன்று பரிதாப மரணத்துக்கு ஆளாகிறான். ஞானச்சாந்து உள்ள கலையை விருத்தி செய்வதுதான் மனிதர்களுடைய முயற்சியாக இருக்கவேண்டும். உயிர்ப்பசை கொண்ட ஒழுக்கத்தைக் கண்டு பிடிப்பதுதான் மனிதனுடைய முதல் வேலையாக அமையவேண்டும்.

கலைக்கும் ஒழுக்கத்துக்கும் உண்மையான விரோதமே கிடையாது. உண்மையான இல்லற வாழ்க்கையில் புருஷனுக்கும் மனைவிக்கும் விரோதம் இருக்குமா? ஆனால் குடும்பங்கள் பெரும் பான்மையில் பூசல்கள் மலிந்து கிடக்கின்றன என்ற காரணத்தினால் இல்லறம் பொய்யாமா? இல்லறம் அவசியம். ஆகவே அதை நடத்தும் வழியைக் கண்டு பிடிக்கவேண்டும். அதைக் கண்டு பிடிக்க முடியாமல், இல்லறமே வேண்டாம் என்று சொல்லுவது முட்டாள்தனமாகும்.

உண்மை என்னவென்றால், புருஷன் மூலமாக மனைவியும் மனைவியின் மூலமாகப் புருஷனும் ஆநந்தமும் ஆதரவும் வல்லமையும் பெறுவதைப் போல கலையின் மூலமாக ஒழுக்கம் திடப்பட்டு திடப்படுகின்றது. ஒழுக்கம், கலைக்கு ஆதரவு அளித்து அதை விருத்தி செய்கின்றது. உண்மையான ஜனநாயக ஆட்சி யில்லாத தேசத்திலே, அரசாங்கம் குடிமக்களை விலங்குகளாகக் கருதுகின்றது. குடி மக்கள் அரசாங்கத்தை விரோதமாகப் பாவிக்கின்றார்கள். ஆனால் உண்மை என்ன? அரசாங்கம்தான் குடிமக்கள்; குடிமக்கள் தான் அரசாங்கம், இதுதான் ஜனநாயக தத்துவத்தின் ரகசியம்.

இதைப்போலவே, கலையும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களை போல. ராஜாவின் தலையும் பூவும் சேர்ந்து ரூபாய் என்ற நாணயமாகிறது. இதைப் போலவே வாழ்க்கை என்ற நாணயத்துக்கு, கலையும் ஒழுக்கமும் இரண்டு அங்கங்களாகும். கலையழகு பொருந்தாத ஒழுக்கம் வெறும் அவலட்சணமாகவும் பாசாங்காகவும் இருக்கும். ஒழுக்க வல்லமை வீசாத கலையால், மனிதன் விவேகத்தையும் சக்தியையும் இழந்து, மிருகப் பிராயமாய் உலகத்தில் உலவ வேண்டி வரும். பலாப்பழத்துக்குள் இனிப்பான சுளை இருக்கிறது; வெளியே முள் நீட்டிக்கொண் டிருக்கிறது. சுளையைக் காக்க முள் தேவை. கலையைக் காக்க ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் முள்ளைப் போலக் குத்தாம லிருப்பதற்காக, கலை தேவை. முடிவில் இரண்டும் ஒன்றே.

தண்டியின் சரிதை

(ஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரி எம்.ஏ.பி.எல்.)

வடமொழி மகா கவிஞராகிய தண்டியாசிரியர் என்பவர் தென் தேசத்தில் நீண்டகாலம் வசித்துள்ளார் என்பதற்குப் போதிய அத்தாட்சிகள் கிடைக்கின்றன. சமீபத்தில் தக்ஷிணபாரதி என்னும் நூல் தொடரில், பிரசுரிக்கப்பட்ட அவந்தி சுந்தரி கதா என்ற தண்டியினுலேயே இயற்றப்பட்ட கிரந்தத்திலிருந்து, அவருடைய சரிதம் வெளியாகின்றது.

அவருடைய முன்னேர்கள் தற்காலம் குஜராத் என்று சொல்லப்படும் பிரதேசத்தில், ஆனந்தபுரம் என்ற கிராமத்தில், வசித்து வந்தனர். அவர்கள் கௌசிக கோத்திரத்தைச் சார்ந்த பிராமணர்களாவார்கள். இங்ஙனமாக வாழ்ந்த இவ் வமிசத்தவர் ஒரு காலத்தில் கோதாவரியின் எல்லையைச் சார்ந்த நாஸிக் என்னும் பிரதேசத்தில் உள்ள அசலபுரம் என்னும் ஊரில் குடியேறிஞர்கள். இவர்கள் வமிசத்தில் உதித்த நாராயணசுவாமி என்பவருக்கு தாமோதரன் என்பார் புதல்வராய் அவதரித்தார். அவர் பிற்காலத்தில், பெரும் புகழ்படைத்து வடமொழி மஹா கவிகளுள் மிகச் சிறந்த ஒருவராய் பாரவி என்னும் பெயர் பெற்று விளங்கிஞர். அப்பிரதேசத்திற்கு அயலிலுள்ள நாட்டின் அரசனை விஷ்ணு வர்த்தனன் என்பான் பாரவியினது புகழைக் கேட்டு மனமகிழ்ந்து இவரை வரவழைத்து ஆதரித்து வந்தான்.

ஒரு சமயம் விஷ்ணுவர்த்தனன் வேட்டையாடும் நிமித்தம், படையுடன் காட்டிற்குப் புறப்பட்டான். அப்பொழுது பாரவியும் உடன் சென்ருர். வேட்டை முடிந்தவுடன் யாவரும் களைப்பாறினர். விஷ்ணுவர்த்தனனும், படைகளும், மாமிசத்தை உண்டு களைப்பாறிஞர்கள். பாரவியோ வேறு உணவு கிடைக்கப் பெருமையினுலும், பசி மிகுதியாலும், தானும் மாமிசத்தை உண்டு களைப்பாறிஞர்.

களைப்பாறிய பின்பு, பாரவி தான் மாமிசம் சாப்பிட்டதற்கு மிகவும் மனம் வருந்தி, தாய் தந்தையர் முகத்தில் விழிப்பதற்கு மனம்கூசி அப் பாபத்தை போக்கக் கருதி, தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டார். இப்படியாக தேச சஞ்சாரம் செய்து தீர்த்த யாத்திரை முடிந்த பின்பு, பல்லவரின் தாயத்தவனும், மேலைக்கங்க குல மன்னனுமான துர்வநீதன் என்பானது நாட்டிற்கு வந்தார். துர்வநீதனும், மிகவும் சந்தோஷத்தோடு பாரவியை வரவேற்று அன்புடன் ஆதரித்து வந்தான். இருவரும் மிகுந்த நட்புக்கொண்டு வாழ்ந்தனர். பாரவி இயற்றிய கிராதார்ஜுநீயம் என்னும் வடமொழிக் கிரந்தத்திற்கு துர்வநீதன் வியாக்யானம் செய்துள்ளான்.

இங்ஙனம் இருந்து வருங்கால் துர்வநீதனது சபைக்கு ஓர் பாடகர் வந்தார். அவரிடம், பாரவி நரசிம்மாவதாரத்திற்கும், சிம்ஹ விஷ்ணுவிற்கும், உவமை வைத்து ஓர் சுலோகம் இயற்றி, அதை காஞ்சியை ஆளும் சிம்ஹ விஷ்ணு விடம் போய் பாடும்படியாகச் சொன்னர். அப் பாடகனும், அங்ஙனமே காஞ்சிபுரம் சென்று, சிம்ஹ விஷ்ணுவிடம் அச் சுலோகத்தைப் பாடினன். அதைக் கேட்ட சிம்ஹ விஷ்ணு மிக மகிழ்ந்து, அப்பாடல் யாரால் பாடப்பட்டது என்று வினவ, பாடகன் அது மேலைக் கங்ககுல மன்னனுகிய துர்வநீதனது சபை வித்துவானுல் இயற்றப்பட்டது என்று பதில் சொன்னன்.

உடனே சிம்ஹ விஷ்ணு, பாரவியை தன்பால் அனுப்புமாறு துர்வநீதனுக்குச் சொல்லியனுப்ப, அவன் இதை காது கேட்காமல் இருந்துவிடவே, மறுபடியும் சிம்ஹ விஷ்ணு வற்புறுத்திக் கேட்க, துர்வநீதன் ஒருவாறு சம்மதப்பட்டு அனுப்பினன். சிம்ஹ விஷ்ணுவானவன் பாரவியை, தன் உயிரினும் மேலாக அன்புடன் ஆதரித்து அவருக்கு தனிவிடுதி முதலியன கொடுத்துதவி, தன்பால் வைத்துக் கொண்டான். பாரவி சிம்ஹ விஷ்ணுவிடம் செல்லும் காலத்தில் வயது இருபதாகும். அவனுடன் நீண்ட காலம்

வாழ்ந்து வரும் காலத்தில் பாரவிக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன.

அவர்களில் இரண்டாவது பிள்ளையாகிய மனோரதன் என்பவருக்கு வீரதத்தன் என்பார் புதல்வராய்ப் பிறந்தார். அவ்வீர தத்தன் என்பவருக்கு கௌரி என்னும் பெயருடைய மனைவி உண்டு. அவர்களிடம் பிறந்தவரே, நம் தண்டி கவியாவார். இவர் தனது சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். அச்சமயத்து காஞ்சியை ஆண்டவன் முதலாம் மஹேந்திரவர்மன் என்பான். இவன் சிம்ஹ விஷ்ணுவின் புதல்வனுவான். மஹேந்திர வர்மனுக்கும், அவனுக்குப் பகைஞராகிய சளுக்கிய வம்சத்து மன்னனை இரண்டாம் புளகேசி என்பவனுக்கும் சண்டை மூண்டது. அதில் மஹேந்திரவர்மன் தோற்று ஓடலாயிற்று. அப்பொழுது தண்டியும் சிறுவயதினராகையால் காஞ்சியை விட்டு வெளியேறினர். தண்டியாசிரியர் பன்னிரண்டு வருஷ காலம் தேச யாத்திரை செய்துகொண்டு, பல பெரியோர்கள், வித்வான்கள், முதலியவரிடம் பல அரிய விஷயங்கள் கேட்டுத் தெளிந்து மகா பண்டிதனுய்ப் பெரும் புகழ்படைத்து விளங்கினர். அச்சமயம் காஞ்சியில் மறுபடியும் மஹேந்திரவர்மனது மகன், முதலாம் நரஸிம்ம வர்மன் என்பவன் சளுக்கியரை ஜெயித்து அரசாண்டு வந்தான். அப்பொழுது தண்டியும் யாத்திரை முடிந்து காஞ்சி வந்து சேர்ந்தார். சிம்ஹவர்மன் தண்டியை அன்போடு வரவேற்று ஆதரித்து வந்தான். இப்படியாக தண்டி சிம்ஹவர்மனோடு இருந்து வருங்கால், பல்லவ ஆளுகைக் குட்பட்ட மகாபலிபுரம் என்னும் நகரில் உள்ள விஷ்ணு கோயிலில், விஷ்ணு விக்கிரஹத்தின் கையானது முறிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு சிற்பி ஒழுங்கு படுத்தி, ஒட்டப்பட்ட இடமே தெரியாமல் செப்பனிட்டான். இதைப் பரீக்ஷித்தறிய சில பெரியோர்களுடன் தண்டியாசிரியரும் வந்து பார்த்தார். ஒட்டப்பட்ட இடம் தெரியவில்லை. அதை செப்பனிட்ட சிற்பியின் திறமைக்கு மெச்சினர். அச் சமயம் கடலினல் மோதித் தள்ளப்பட்ட ஓர் தாமரை மலரானது, அங்கு கோயிலில் இருந்தருளும் விஷ்ணுவின் பாதத்தை வந்தடைந்து, ஓர் வித்தியாதர உருவமெய்தி ஆகாயத்திற் சென்று மறைந்தது. இதைக் கண்ட யாவரும் மகிழ்ந்து அதிசயித்தனர். அன்றிரவில், தண்டியின் கனவிலே மஹாவிஷ்ணு தோன்றி "அவ்வித்தியாதரன், ஒரு சாபத்தால், அங்ஙனம் தாமரையாக ஆக்கப்பட்டான். என் பாதத்தைச் சேர்ந்தமையால், சாபம் நீங்கிற்று. ஆதலால் நீ அவனுடைய சரிதத்தை எழுதுவாயாக" என்று சொல்லி மறைந்தார். உடனே அவரும் அவந்தி சுந்தரிகதா என்ற கிரந்தத்தை எழுதி முடித்தார். இதுவே நமது தண்டிமகா கவியின் சரிதமாகும்.

இவர் தென்னுட்டில் நீண்ட காலம் வசித்துள்ளார். அன்றியும், கௌடர் முதலானவர்களின் செய்யுள் நெறிகளை வெறுத்து, வைதருப்பரது செய்யுள் நெறியையே விரும்பி யிருக்கிருர். மிகவும் புகழ்ந்துள்ளார். இவர் தென் தேசத்தில் இருந்தமையாற்றுன், இவரது தண்டியலங்காரம் என்னும் அலங்கார நூலானது தமிழில் வரலாயிற்று.

மானம் போய்விட்டது

மியூனிச் ஒப்பந்தத்தின் பிறகு ஏற்பட்ட மன அமைதியில் நிலைமையை ஆராய்ந்து எழுதிய கட்டுரை ஒன்றில் ஸ்ரீ பிரெய்ல்ஸ் போர்ட் பின்வருமாறு எழுதுகிறார்:—

நெருக்கடி சமயத்தில் நான் சில கன்ஸர்வேடிவ் கட்சி அங்கத்தினர்களைக் கண்டு பேசிக்கொண்டிருந்தேன். அவர்களுடைய பயத்திற்கு இரண்டு காரணங்கள் இருந்ததாக எனக்குத் தென்பட்டது.

முதலாவது விமானப் படையெடுப்பிற்கு சரியான தற்காப்பு வசதிகள் தற்காலம் இங்கிலாந்தில் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அந்த அம்சத்தில் வசதிகளே கிடையாது; ஏனெனில் ஜெர்மனியுடன் தகராறு வரலாமென்று சர்க்கார் ஒரு நாளும் நினைக்கவில்லை.

இரண்டாவது, ஸோவியத் ரஷ்யாவுடன் சேர்ந்து ஒரு காரியம் செய்வது என்பதே அவர்களுக்கு மிகவும் கசப்பான விஷயம். அதை விட ஜெர்மன் இதாலி யதேச்சாதிகாரிகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பணிந்து போய்விடுவதே மேல் என்று எண்ணினார்கள்.

ஆனால் நமது பலவீனத்தின் உண்மையான காரணங்கள் இவையல்ல. வாழ்க்கையில் ஏதாவதொரு விஷயத்திற்காவது திடமாக நின்று போராடும்படியாக நம்மிடையே எவ்வளவு பேர் முன்வருவார்கள்?

"இந்த நாட்டில் நமது உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் ஆபத்து வந்தால் நாம் கட்டாயம் எதிர்த்து நின்றே தீருவோம்? ஜெக்குகளுக்காக நாம் உயிர்விட வேண்டுமென்பது என்ன?" என்று கேட்கலாம்.

இனிமேல் நமது உரிமைகளையும், நம்மையுமே பாதுகாத்துக்கொள்ள நம்மால் முடியாது. நமக்கு சௌகரியமாக இருந்த ஒவ்வொரு எதிர்ப்பு பூமியையும் எதிரிக்குப் பறிகொடுத்துவிட்ட பிறகு நாம் என்னத்தைச் செய்ய முடியும்? நமக்கு சமயத்தில் உபகாரம் செய்யக் கூடிய ஒவ்வொரு நேச தேசத்தையும் எதிரிக்குக் காட்டிக்கொடுத்த பிறகு நம்மால் என்ன செய்ய முடியும்?

இந்தக் காரியத்தைத் தான் நமது "நாஷனல்" சர்க்கார் செய்து முடித்திருக்கிறது. சுதந்திரத்தில் பற்றுள்ளவர்கள் எல்லோரும் உடனே ஒன்று சேர்ந்து அதைத் தொலைக்காவிட்டால் இன்னும் இதேமாதிரிதான் நடந்து கொண்டே போகும். ஸ்ரீ சேம்பர்லேன் மியூனிச்சில் என்ன காரியம் செய்தார் தெரியுமா? கோதுமையும் எண்ணெயும் நிறைந்த மத்திய ஐரோப்பாவின் களஞ்சியச் சாவிகளை எதிரியின் கையில் ஒப்படைத்துவிட்டார். ஆபத்து தோன்றின நிமிஷமே நீடித்த நண்பர்களைச் சிதறிப் போகும்படியாகக் கைவிட்டுத் துரோகம் செய்த நம்மை எந்த நாடு நம்பும், எந்த நாடு நம்முடன் சேரும்?

"ரோம்-பெர்லின் அச்சின்" பூரா பலமும் சேர்ந்து இனிமேல் நம்மேலும் பிரான்சின் மேலும் திரும்பலாம். வேண்டுமென்றே நாம் ரஷ்யாவை ஒதுக்கியதால், ஐரோப்பாவிலேயே மிகவும் வலிமை வாய்ந்த சைனியத்தின் ஆதரவையும் இழந்துவிட்டோம்.

இனிமேல் என்ன பாக்கி? ஸ்பெயினையும் சேம்பர்லேன் முசோலினியிடம் கொடுத்துவிட்டால் பிரான்ஸ் முற்றுகை போட்டதுபோல ஆகிவிடும். இந்த மாதக் கடைசிக்குள் நாம் தைரியமாக விழித்தெழுந்திராவிட்டால் சேம்பர்லேன் நிச்சயம் அதையும் செய்துவிடுவார்.

நாம் நமது தேகத்தைக் காப்பாற்றிக் கொண்டு, மானத்தை இழந்துவிட்டோம். இப்பொழுது சத்தியம் தப்பி சௌகரிய மடைந்தோம்; நமது சுதந்திரத்திற்கே உலைவைத்து விட்டோமே!

புத்தக விமர்சனம்

முக்கிய அரசியல் திட்டங்கள்: ந. ரா. சுப்பய்யர் எழுதியது; சென்னை புஸ்தக காலய பிரசார சங்க வெளியீடு.

விலை ரூ. 1—8—0.

பொழுது போவதற்காக மட்டும் படிப்பதென்ற மனப்பான்மை இப்போது மாறிக் கொண்டிருக்கிறது. சகல துறைகளிலும் அறிவை வளர்க்கத் தூண்டு கோலாக இருக்கும் சாஸ்திர புஸ்தகங்கள் இதற்கு முன்பே தமிழில் வெளி வந்து குவிந்திருக்க வேண்டும். ஆனால் என்றுமே வெளிவராமல் இருப்பதை விட பின் தங்கியாவது வெளி வருவது மேல் என்றுதான் தமிழ்ப் புஸ்தகங்கள் விருத்தியைப் பற்றி நாம் ஆறுதல் கொள்ள வேண்டி இருக்கிறது. சென்னைப் புஸ்தகாலய பிரசார சங்கம் இந்தத் துறையில் இறங்கி ராஜீய சாஸ்திரத்தைப் பற்றிய, முதல் புஸ்தகமாக 'முக்கிய அரசியல் திட்டங்கள்' என்ற புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறது. உலகில் முக்கிய அரசியல் திட்டங்களை விளக்கிக் காட்டும் முதல் தமிழ் புஸ்தகம் இதுதான். சமீபத்தில் நம்மீது சுமத்தப் பட்ட மாகாண சுயாட்சியுடன் சமஷ்டி அரசியலும் சுமத்தப்பட இருக்கும் சந்தர்ப்பத்தில், இந்தியாவுக்கு ரொம்பவும் பிடித்தமான பொறுப் பாட்சி வாய்ந்த சமஷ்டி அரசியலைத் தயாரித் திருப்பதாக பிரிட்டிஷார் பெருமை கொள்ளும் சமயத்தில், சமஷ்டி அரசியலை எதிர்ப்பதற்குக் காங்கிரஸ் கச்சை கட்டிக் கொண்டிருக்கையில், பிற நாட்டு சமஷ்டி அரசியல்களுடனே, பார்லிமெண்டரி முறைகளுடனே ஒப்பிட்டு பார்த்துக் கொள்வதற்கு இந்தப் புஸ்தகம் ஏதுவாக இருக்கும்.

முதல் இரண்டு அத்தியாயங்களில் அரசியல் அமைப்புகளின் பாகுபாடுகள், அரசியல் அங்கங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் முறைகளிலும் பழமை வாய்ந்ததும், பார்லிமெண்டுகளின் அன்னை என்று அழைக்கப்படுவதுமான பிரிட்டிஷ் அரசியல்முறை விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பிரான்ஸ், தென் ஆப்பிரிக்கா யூனியன், உலகில் மிகச் சிறந்த அரசியல் முறையாக கருதப்படும் ஸ்விட்ஜர்லாந்து, ஐக்ய அமெரிக்க நாடுகள், இவற்றின் அரசியல்களும் விளக்கப்பட்டு அதனதன் பலமும் பல ஹீனமும் ஒப்பிடப் பட்டிருக்கிறது. பிரிட்டன், பிரான்ஸ், ஐக்ய ஆட்சி நாடுகள், ஸ்விட்ஜர்லாந்து, ஐக்கிய அமெரிக்கநாடுகள் சமஷ்டி ஆட்சி நாடுகள். பொது உடைமை தத்வத்தை அடிப்படையாக கொண்ட ஸோவியத் அபேதவாதக் குடியரசுகளின் யூனியன். அரசியலைப் பற்றிய ஒரு அத்யாயம் ரொம்பவும் முக்யமானதாகும். நம் புது அரசியல் திட்டத்தைப் பற்றிய ஒரு அத்யாயமும்சேர்க்கப்பட்டிருக்கிறது. காலப் போக்கில் நம் புது அரசியல் அனுஷ்டானத்தில் என்ன விதமாக இருக்கப் போகிற தென்பது தெரியாததால் அதன் சிக்கல்களைப் பற்றி இப்போது கூறமுடியாது. ஆனாலும் அதிகாரப் பிரிவினை விஷயத்தில் அதன் சக்தியை மற்றவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

மேலே குறிப்பிட்ட திட்டங்கள் எல்லாம் ஜன நாயக அரசியல் திட்டங்கள். தற்போது அவைகளினின்று மாறுபட்டு யதேச்சாதிகார அரசியல் முறையை கைக்கொண்டுள்ள, நாஜி, ஜெர்மன், பாஸிஸ்ட், இத்தாலி, இன்னும் ஜப்பான் ஆகிய தேச அரசியல்களை நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை. அவைகளும் ஒரு தனி லக்ஷியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக் கின்றன. பக்ஷபாதமற்ற ஒரு அரசியல் மாணவன் அவற்றையும் அறிந்து கொள்ள இந்தப் புஸ்தகத்தில் ஏற்பாடு செய்திருக்கலாம். 'ஆலிகார்க்கி' (Oligarchy) என்பதற்கு 'குறுநில மன்னர் ஆட்சி' என்ற பதம் ரொம்பக் கடினமாக இருக்கிறது. இன்னும் புஸ்தகப் போக்கிலும் தமிழ் நடை வெகுவாகத் தளர்த்தப் பட்டிருந்தால் உசிதமாக இருந்திருக்கும்.

புஸ்தகம் வெகு நேர்த்தியான பைண்டுடன் நல்ல காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது.

ஸி. எஸ். செல்லப்பா.

சினிமாச் சுருள்

(வே. சு. ரா.)

'லக்கி ஸ்டார்' என்ற தமிழ் படத்தை மைசூரில் தயாரித்துக் கொண்டிருக்கிறார்களாம். அந்தப் படம் தமிழ் நாட்டின் தலை சிறந்த படமாக இருக்கப் போகிறது என்று நம்பத்தக்க இடத்திலிருந்து செய்தி வந்திருக்கிறது.

டைரக்டர் ஒய். வி. ராவ் சமூகப் பாவிகளைப் படம் பிடிக்கப் போகிறார் என்று அன்றைக்கு யாரோ பேசிக்கொண்டிருந்தார்கள். சமூகப் பாவிகளா ? அந்தப் படு பாவிகள் யார்? ஒய். வி. ராவ் நல்ல மனுஷ



ஸ்வர்ணலதாவில் ஓர் காட்சி.

ராச்சே, அவர்களோடு ஏன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கிலேசப் பட்டுக்கொண் டிருந்தபோது, 'சமூகப் பாவிகள் என்பது ஒரு படத்திற்குப் பெயர்' என்று என் நண்பர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

கிருஷ்ணன் இதோ தூது செல்லத் தயாராகி விட்டார். ராஜகோபால் டாக்கீஸார் இத்தனை நாளாய்ச் சிரமப்பட்டு கிருஷ்ணனை தூதனுப்ப முயன்று கடைசியில் வெற்றியடைந்து விட்டார்கள்! அத்துடன் நவீன தென்னாலிராமனும் சென்ற வாரமே வெளியில் புறப்படச் சித்தமாயிருப்பதாக அறிகிறேன்.

சியாம சுந்தரில் நடிக்கும் ஸ்ரீ தவமணி தேவிக்கு ஹிம்ஸை அதிகமாகி இருப்பதாகத் தெரிகிறது. பல பட முதலாளிகள் அவரிடம் சென்று 'நீங்கள் எங்கள் படத்தில் நடிக்க வேண்டும்' என்று ஹிம்ஸைப் படுத்துகிறார்களாம். இந்தத் தொந்தரவிலிருந்து ஸ்ரீ தவமணியைக் காப்பாற்றுவதற்காக, லக்ஷ்மி ஸினிடோன்காரர்கள் அவருடன் இன்னும் ஒரு படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்களாம்.

'விமோசனம்' என்ற படத்தில் குழந்தைகள் 'ஆக்ட்' செய்கின்றனவாமே என்று ஒருவர் கேட்கிறார். "ஆமாம்! தப்பித் தவறி பெரியவர்கள் நடிக்காமலிருந்தால் எந்தப் படமும் நிச்சயம் நன்றாயிருக்கும்" என்று நண்பர் சொல்கிறார்.

" சொல்லிக் கொடுக்கிறபடி நாய், குதிரை இவைகளெல்லாம் டிக்கும்போது தமிழ் நடிகர்கள் பட்டும் ஏன் அப்படி நடிப்பதில்லை " என்று ஒருவர் கோபமாக உசாவுகிறார். அப்படிச் செய்துவிட்டால் நடிகர்களுக்கும் நாய் குதிரைகளுக்கும் என்ன வித்தியாசம் என்று நாம் கேட்கலா மல்லவா ?